# நாற்று

பெண்கள் இருமாத இதழ்

பங்குனி - சித்திரை - 1995




விலை - 20/=

# இளவரசி சேலைச்சோலை

திருமணம் மற்றும் முகூர்த்த பட்டுப்புடைவைகள்
சேட்டிங், சூட்டிங் என்பவற்றை உங்கள்
எண்ணம்போல் எண்ணற்ற ரகங்களில்
தெரிவுசெய்திட
இன்றே விஜயம் செய்யுங்கள்

## இளவரசி சேலைச்சோலை

57, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

கண்டவுடன் அக மகிழ்ந்து
கொண்டவுடன் அணிந்து மகிழ
நாடவேண்டிய ஒரே இடம்

## விதுரா

## ஆடை அகம்

34, சிறப்பு அங்காடி,
(நவீனசந்தை உட்புறம்)
யாழ்ப்பாணம்.

நடுகை - 01 நாற்று - 02

**"பெண்ணுக்கு விடுதலை நீரில்லை என்றால்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கையில்லை."**

பெண் விடுதலை, பெண்ணுரிமை, பெண் எழுச்சி, பெண் சமத்துவம் என்ற பதங்கள் இன்று ஆண்களை மட்டுமன்றி பெண்களில் பலரையும் கூட முகச் சுழிப்புக்கு உள்ளாக்கு மளவிற்கு தவறான அர்த்தத்தில் நோக்கப்படுகிறது. இதற் குரிய அடிப்படைக் காரணம் என்ன? பெண்களின் சமூக பொருளாதார அந்தஸ்தை முன்வைத்து அபிவிருத்தி அடைந்து வரும் தேசங்களில் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்த பெண்ணுரிமை இயக்கங்கள் தமது பொருளாதார அந்தஸ்து மறுப்பு, சமூகத்தில் தாழ்ந்த நிலை, பாலியல் வன்முறை, கல்வியுரிமை மறுப்பு, வாக்குரிமை மறுப்பு போன்றவற்றிற்கு எதிராக கிளர்ந்து எழுந்து போராட்டம் நடாத்துவது ஒரு புறம் இருக்க அபிவிருத்தி அடைந்த தேசங்களில் சமூக. பொருளாதார அந்தஸ்தைப் பெற்ற பெண்கள் பெண்ணியம் என்ற பெயரில் நடத்திய ஆடைக்குறைப்பு, உள்ளாடை எரிப்பு, பாலியல் சுதந்திரம் என்பவற்றின் ஊடாக பெண்ணியம் என்ற பெயரில் நடாத்திய அசிங்கங்கள் தான் எமது சகோதர, சகோதரிகளை இப்பெயரை கேட்ட மாத்திரத்தில் அருவருப்புக் கொள்ளச் செய்துள்ளமை மறுக்க முடியாத உண்மை. பெண் ணியம் என்ற கருத்தை முன்வைக்கும் பெண்களை பெண்களே அருவருப்புடன் நோக்குமாறு இந்த மேற்குலக பெண்ணியம் வழிகோலியுள்ளது. இத்தகைய தவறான புரிந்து கொள்ளல் களைக் களைய நாற்று முற்று முழுதாகப் பாடுபடும்.

பெண்ணை ஆணிலிருந்து வேறுபடுத்தும் உயிரியல் ரீதியான அம்சங்களை முற்று முழுதாகப் ஏற்றுக் கொண்டு அதன டிப்படையிலே பெண்ணியம் சார்பாக கருத்துக்களை நாற்று முன்வைக்கும் அதே சமயம் பெண் என்ற ஒரு காரணத்திற்காக பெண் பாதிக்கப்படும் நிலைமைக்கு எதிராகவும்,

பெண்ணியம் என்ற பெயரில் பெண்ணின் புறத்தோற்ற மாற்றங்களை அர்த்தமற்றதாக நினைக்கும் அதே சமயம் பெண்ணின் அகத்தைச் செப்பனிட்டு அறிவு சார் சிந்தனைகளைத் தூண்டி அறிவு விருத்தி ஊடாக பெண்ணின் பொருளாதார அந்தஸ்தில், பெண்ணின் சமூக நிலையில் மாற்றம் வேண்டியும்,

பெண்ணியம் என்ற பெயரில் ஒரு சில நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் வெளிநாட்டுக் கலாச்சார சீர்கேடுகள் எமது கலாச்சாரத்திற்குள் புகுந்து எமது பெண்களையும் சீரழிக்கும் நிலைமைக்கு எதிராகவும்,

தமிழீழ தேசத்தில் ஆண்களே மனம் நோகும் அளவிற்கு பெண்ணுக்கு இழைக்கப்படும் சிறுமைகளை இனங்கண்டு அதைகளைந்தெறிவதற்கும் பாடுபடும் நாற்று.

சகோதர, சகோதரிகளே நாற்று இம்மண்ணில் ஆழமாய் வேரூன்ற உங்கள் விமர்சனங்கள் உரமாகட்டும். □

---

# சீ[இத்] தனம்

சமுதாயச் சகதியின்
விச வித்து
உழைக்கத
தெரியாதவர்களின்
நாகரிகமான சுரண்டல்
முதுகெலும்பற்றவர்களின்
மூலதனம்
பட்டமும் பதவியும்
நிர்ணயிக்கும்
தங்கமும், வெள்ளியும்
நோட்டுக் கற்றைகளும்
இட்ட உரத்தில்
இன்று
சமூகத்தில்
செழித்துக் கொழுத்து
காணப்படுவது
இது தான்
பெண்ணே!

மண்ணையும் பொன்னையும்
பணத்தையும்
உன்னையும்
ஒன்றாக்கித் தானே
சமூகம்
உன்னை
ஆணுடன்
வாழ வைக்கிறது.
தங்கத்துடன்
உந்தன்
தலை விதியையும் அல்லவா
உரசிப் பார்க்கிறது
நோட்டுக்
கற்றைகளோடு
உந்தன்
வாழ்வுப்
பக்கங்களும் தான்
எண்ணப்படுகின்றன.
மாடு கூட
விலை பெற்றுக்
கை மாறும் போது
நீ மட்டும்?

- ரூபி -

பங்குனி – சித்திரை 95
'நாற்று'

உருவாக்கம்
ஆசிரியர் குழு

ஓவியங்கள்
தயா, சிரித்திரன் சுந்தர்

அச்சுப்பதிப்பு
மாறன் பதிப்பகம்,
யாழ்ப்பாணம்.

இதழமைப்பு
சிறீ வாணி

தொடர்புகள்
நாற்று பணியகம்
இராச வீதி, கல்வியங்காடு,
கோப்பாய்.

உள்ளே துளிர் விடுபவை


- சீ(இத்)தனம் 02
- நாற்றே நீ வருக 04
- இது இவர்களைப் பற்றி 05
- கருச்சிதைவு 07
- உன்னோடு ஒரு வார்த்தை 13
- உண்மைச் சம்பவம் 14
- நேர்காணல் 18
- தமிழிலக்கியத்தில் பெண்களின் இழிதகைமைகள் 23
- பெருமைக்குரிய பெண்மணி 30
- பாக்கியம் மாமியும் பரமேசுவரியும் 32
- அக்கா காத்திருக்கிறாள் 36



# நாற்றே நீ வருக !

புண்பட்டுப் போனாலும்
பண்பாடு குலையாத எம்
பாசத்துக்குரிய மண்ணில்
பற்றிப்படர வரும்
நாற்றே,
இருகரம் நீட்டி உன்னை
வரவேற்கின்றோம், வருக !
நாற்றே,
நாற்றிசையும் நீ படர்ந்து
நன்மை செய்திடுக !
வெரோடிப் போன பல
வேற்றுமைகள் களைக !
விரும்பும் புதுமைகளை
வேகமுடன் செய்க !
அரும்புகளாய் இருக்கின்ற
அடுத்த சந்ததியை
அரவணைத்து
ஆக்க வழி காட்டுக !
நாற்றே !
பெண்ணாகப் பிறந்ததால்
பெருந்துன்பம் அனுபவிக்கும்
பிறவிகளை உயிர்ப்பூட்டும்
பெரு நன்மை நீ செய்க !
இன்னல் பல சூழ்ந்தும்
இழப்புக்கள் பல கண்டும்
இருப்புக்காய் வாழ்கின்ற
எம்மவரை நீ ஏற்று !

– ஆதிலக்சுமி

# இது இவர்களைப்பற்றி......

திருமணத்தின் பின்பு விளையாட்டுத்துறையில் ஈடுபடும் பெண்ணை சமூகம் எந்தக் கண்ணோடு நோக்குமோ என ஒதுங்கியிருந்த தன்னை தனது கணவர் தான் ஊக்கிவித்துத் திரும்பவும் இத் துறையில் ஈடுபடுத்தக் காரணமானவர் எனக் கூறும் திருமதி மொய்ரா ராஜசிங்கம் தெல்லிப்பளை கிறாஸ் கோப்பர்ஸ் வலைப்பந்தாட்ட அணியின் ஒரு முன்னணி வீராங்கனையாவார். விளையாட்டுத் துறையில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட ஒரு குடும்பத்தில் 1966ஆம் ஆண்டு பிறந்த மொய்ரா தனது 11வது வயதிலேயே பாடசாலை மட்டத்தில் விளையாட ஆரம்பித்தார். இவர் உடற்பயிற்சித்துறை, எறிபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் போன்றவற்றில் தனக்கு மிகுந்த ஆர்வம் உண்டு என்று கூறுகின்றார். ஆனால் மகளிருக்கான எறிபந்தாட்டம் தற்போது பிரபலமாக இல்லாததால் வலைப்பந்தாட்டத்தில் தனது முழுக்கவனத்தினையும் செலுத்திவருகிறார். பாடசாலை வாழ்விலேயே தான் சார்ந்த அணிகள் பெற்ற பல வெற்றிகளைப் பற்றிக் கூறும் மொய்ரா அக்கருணத்தில் அவ்வெற்றிகளுக்குக் காரணமான பயிற்றுநர் மதுரம் ஆசிரியரையும் தனது தாயாரையும் நன்றியுடன் நினைவுகூருகிறார். 13 ஆவது வயதில் வலைப்பந்தாட்ட உலகில் பிரவேசித்து தொடர்ந்து அத்துறையில் பல போட்டிகளை எதிர் நோக்கி வெற்றி பெற்று வரும் இவர் அண்மையில் தான் தலைமை வகித்த தெல்லிப்பளை கிறாஸ் கோப்பர்ஸ் அணி ஈழநாதம் கேடயத்திற்கான வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்றதை இங்கு குறிப்பிடுகிறார். இவர் கணவர் திரு. ராஜசிங்கம் தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் விளையாட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் பல்வேறு அமைப்புகளிலும் உடற்கல்வி பயிற்றுநராக இருந்து வருகிறார்.

திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்கு தாயான மொய்ரா திருமணத்தின் பின்பு குறிப்பாக குழந்தைப் பேற்றின் பின்பு இவ்வாறான விளையாட்டுக்களில் தம்மை ஈடுபடுத்துவதால் உடலியல் ரீதியாக எந்தப்பாதிப்பும் ஏற்படுவதில்லை என்பதை வலி

யுறுத்துகிறார். மாறாக மற்றைய பெண்களுக்கு பிரசவநேரங்களில் ஏற்படும் எந்தச் சிக்கலும் இன்றி மிக இலகுவாக தனது பிரசவங்கள் இடம் பெற்றதாக இங்கு குறிப்பிடுகிறார்.

குடும்பப் பெண்ணாக இருந்து கொண்டு விளையாட்டுத்துறையில் ஈடுபடுவதற்கு வழமையான வேலைகள் ஒரு தடையாக இருக்கும் என்பதை மறுதலிக்கும் மொய்ரா விளையாட்டில் தம்மை ஈடுபடுத்துவதால் பல நன்மைகள் உண்டு என்கிறார்.

குறிப்பாக நன்றாக விளையாடும் பிள்ளைதான் கல்வியில் முன்னணி வகிக்க முடியும். பல விதமான மனிதர்களுடன் புரிந்துணர்வு, நட்பு, பரஸ்பரம் நம்பிக்கை என்பனவற்றை மேம்படுத்த விளையாட்டுலகில் வாய்ப்பு ஏற்படுகிறது எனக் கூறும் மொய்ரா தற்போதைய மத்தியஸ்தம் பற்றி விசனம் தெரிவிக்கிறார்.

சிறந்த பயிற்றுனரிடம் பயிற்சி எடுத்தல், நேரம் தவறாமை, பொறாமை இன்றிய போட்டி மனப்பான்மை என்பனவற்றை கவனத்தில் எடுத்தால் மகளிர் தமது நிலையை தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள முடியும் எனத் தனது கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து கொள்கிறார்.

மகளிரின் விளையாட்டுத்துறை ஆர்வம் எதிர்காலத்தில் அவர்கள் பெற்றுக்கொள்ளும் வாழ்க்கைத் துணைவர்களின் புரிந்துணர்வைப் பொறுத்தே மாற்றமடையும் என்று கூறும் இவர், தான் சார்ந்த துறையிலுள்ள ஒருவரை கணவனாக அடையப் பெற்றதால் தொடர்ந்தும் தன்னால் விளையாட்டுலகில் பிரகாசிக்க முடியுமென நம்பிக்கை தெரிவிக்கிறார்.

மொய்ராவின் கணவனைப் போன்று எல்லா ஆண்களும் இருந்தால் ஆயிரக்கணக்கான மொய்ராக்கள் எமது பெண்கள் மத்தியில் உருவாக முடியும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

※ **பெண்கள் சம உரிமை பெற்று சகல அடக்குமுறையில் இருந்தும் விடுதலை பெற்று ஆண்களுடன் கௌரவமாக வாழக்கூடிய புரட்சிகர சமுதாயமாகத் தமிழீழம் அமைய வேண்டும் என்பதே எனது ஆவல்.**

**தலைவர் திரு. வே. பிரபாகரன்**

☆☆☆☆★☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

# கருச்சிதைவு (Abortion)

கருச்சிதைவு என்றால் கருப்பையில் காணப்படுகின்ற சிசுவானது கர்ப்பம்தரித்து 7 மாத காலத்துக்குள் வெளிவருதலை அல்லது வெளிவர முயற்சித்தலைக்குறிக்கிறது.

இங்கு உறுதிப்படுத்தப்பட்ட கர்ப்பத்தில் கிட்டத்தட்ட 10-15 வீதமானவை கருச்சிதைவிலேயே முடிவடைகின்றன. மேலும் இக் கருச்சிதைவானது ஆதிகமாக கர்ப்பம் தரித்து இரண்டு மாதத்தில் இருந்து மூன்றரை மாதத்தினுள் நடைபெறுகின்றது.

கடந்த மூன்று மாத காலப் பகுதியில் யாழ். வைத்தியசாலை பெண் நோயியல் விடுதியில் கிட்டத்தட்ட 164 கர்ப்பிணிகள் கருச்சிதைவுடன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இத்தகவலைக் கொண்டு பார்க்குமிடத்து அண்மைக் காலங்களில் கருச்சிதைவுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இவற்றைவிட சில முழுமையான கருச்சிதைவுகள் அதாவது கர்ப்பத்தின் சகல உள்ளடக்கங்களும் (சிசு, நஞ்சுக்கொடி) முழுமையாக வெளியேற்றப்பட்ட கருச்சிதைவுகள் பொதுவாக வைத்தியசாலை அனுமதிக்கு வரா மல் போவதுமுண்டு.

எனவே சகலதையும் தொகுத்துப் பார்க்கும் போது கருச்சிதைவு அதிகரித்துள்ளது புலனாகிறது.

அடுத்ததாக நாம் கருச்சிதைவு ஏற்படுவதற்கான காரணங்களைப் பற்றி சிறிது பார்ப்போம்.

❋ பரம்பரை அலகில் காணப்படுகின்ற குறைபாடுகள் முளையத்தில் ஏற்படுகின்ற தன்னிச்சையான விகாரங்கள் போன்ற காரணிகள் கர்ப்பம் தரித்து குறுகிய காலத்தினுள் ஏற்படுகின்ற கருச்சிதைவுக்கு காரணமாக அமைகின்றன.

❋ கர்ப்பிணிகளில் ஏற்படுகின்ற சில நோய்களினாலும் கருச்சிதைவு உண்டாகலாம். உதாரணமாக ஜேர்மன் சின்னமுத்து, மலேரியா, மேக நோய்(பாலியல் நோய்), சல ரோகம், உயர் இரத்த அழுத்தம், சிறுநீரக நோய் போன்ற நோய்களினாலும், போசாக்கின்மையாலும் கருச்சிதைவு ஏற்படலாம்.

❋ பிறப்பிலிருந்தே காணப்படுகின்ற கருப்பை குறைபாடுகள், கருப்பையில் வளர்கின்ற கட்டிகள், சிக்கலான பிரசவத்தினால் கருப்பைக்கழுத்தில் ஏற்படுகின்ற பலவீனம் போன்றவையும் கருச்சிதைவை உண்டாக்கலாம்.

❋ ஓம்மோன்களின் குறைபாட்டினாலும் (குறிப்பாக புறோஜெஸ் ரறோன்) தைரொயிட் சுரப்பியின் சுரப்பு கூடுதல் அல்லது குறைவதனாலும் கருச்சிதைவு உண்டாகின்றது

அன்றி கருப்பையையோ காயப்படுத்துவதினால் ஏற்படுகின்றது இதனையே தொற்றுள்ள கருச்சிதைவு (Septic abortion) அல்லது சட்ட விரோத கருச்சிதைவு (Criminal abortion) என்று அழைக்கின்றோம்.

❋ மேலும் சடுதியான பயம். திடீரென ஏற்படுகின்ற கடுமையான கவலை, உள நெருக்கீடு போன்ற மனத்தாக்கங்களும் கருச்சிதைவை உண்டாக்கலாம்.

---

**வைத்திய கலாநிதி பத்மலோசினி**
**(சாந்தி)**

---

❋ சில வகை மருந்துகள் உதாரணமாக புற்றுநோய் சிகிச்சைக்கு பாவிக்கப்படுகின்ற மருந்துகள், குயினைன் மருந்துகள் போன்றவற்றினாலும் கருச்சிதைவு ஏற்படலாம்.

❋ கருப்பையினுள் அன்னிய பொருட்களைச் செலுத்துவதாலும் கருப்பையை காயப்படுத்துவதினாலும் கருச்சிதைவு ஏற்படுகின்றது. இவ்வகையான கருச்சிதைவானது வேண்டப்படாத கர்ப்பம் ஒன்று தரிக்கும் போது அக் கருவை கலைப்பதற்கான, சட்டவிரோதமான முறையில், மருத்துவ ரீதியான முறையில், தொற்று நீக்கப்படாத, தடிகள் கம்பிகள் ஊசிகள் போன்றவற்றை செலுத்துவதன் மூலம் அங்கு வளர்கின்ற சிசுவையோ

மேற் குறிப்பிட்ட மனநெருக்கீட்டின் நிலைகளின் போது கருப்பையானது சடுதியாக பலமாக சுருங்குவதினால் கருச்சிதைவு உண்டாகின்றது.

நாம் இதுவரையும் கருச்சிதைவை ஏற்படுத்தவல்ல காரணிகளைப் பற்றிப் பார்த்தோம். ஆனால் பொதுவாக காரணமேதும் இன்றிப் பல கருச்சிதைவுகள் ஏற்படுகின்றன.

கருச்சிதைவு என்று குறிப்பிடும் போது அங்கு கருப்பையினுள் காணப்படுகின்ற உள்ளடக்கம் அனைத்தும் முழுமையாகவும் வெளியேற்றப்படலாம்.

வெளியேறும் முயற்சியின் ஓர் அறிகுறியாக குருதிக் கசிவு அல்லது தீட்டுப்படுதல் மட்டும்

காணப்படலாம். அல்லது இரத்தக்கட்டிகள், முளையத்தின் பகுதியில் சில, போன்றவும் வெளியேற்றப்படலாம்.

மேலும் கருச்சிதைவின் காரணமாக கருப்பை உள்ளடக்கம் முழுவதும் வெளியேற்றப்படுமேயானால் அங்கு கர்ப்பம் முற்றாக அழிந்துவிடும். இவ் வகையான கருச்சிதைவை முழுமையான கருச்சிதைவு என்கிறோம். இதற்கு மாறாக குருதிக் கசிவு அல்லது தீட்டுப்படுதல் இருக்கும் சமயங்களில் அங்கு முளையமானது இறக்காது உயிருடன் இருக்கும். இவ்வாறு உயிருடன் இருக்கும் முளையமானது. கருச்சிதைவின் போது வெளியகற்றப்படுவதில்லை. இதற்கு மாறாக ஓய்வு. சிகிச்சை என்பவற்றின் மூலம் கருப்பையில் காணப்படுகின்ற முளையம் அல்லது சிசு வளர்ச்சியடைந்து கர்ப்பம் முழுமையடைய வாய்ப்பு உண்டாகின்றது. ஆனால் இங்கு ஏற்படுகின்ற குருதிக் கசிவானது கடுமையாக இருப்பதுடன் வயிற்றுக் குத்தும் சேர்ந்து காணப்பட்டால் கருச்சிதைவானது முழுமையானதாக மாறி கர்ப்பம் முற்றாக அழியவும் வாய்ப்புண்டு. சில சமயங்களில் கருச்சிதைவின் போது முளையம் அல்லது சிசு வெளியேற்றப்பட்டிருக்கும். ஆனால் நஞ்சுக்கொடி அல்லது சூல் வித்தகம் வெளியேறாமல் கருப்பையினுள் காணப்படும். இதனை முழுமையற்ற கருச்சிதைவு என்கிறோம். இங்கு கருப்பையினுள் நஞ்சுக்கொடி இருப்பதினால் கருப்பை சுருங்குவதில் தடங்கல்கள் ஏற்பட்டு அதனால் அதிகளவு குருதிப்பெருக்கு உண்டாகின்றது. ஏனெனில் கருப்பை சுருங்கிச் சிறுப்பதினாலேயே குருதிப்பெருக்கு கட்டுப்படுத்தப்படுகிறது. இப்படியான குருதிப் பெருக்கின் மூலம் சில சமயம் அதிர்ச்சி கூட ஏற்படலாம். இந்த சந்தர்ப்பங்களில் இக்கருச்சிதைவானது சத்திர சிகிச்சை மூலம் முழுமையான கருச்சிதைவாக மாற்றப்படுகின்றது. அதாவது மயக்க மருந்து கொடுத்த பின்பு கருப்பைக் கழுத்துகள் விரிக்கப்பட்டு கருப்பையினுள் காணப்படுகின்ற கர்ப்பத்தின் எஞ்சிய மீதிகள் வெளியேற்றப்படுகின்றன. இதனையே நாம் D&E என்கிறோம் (Dilation & Evacuation)

மேலும் மருத்துவ ரீதியாகவும் சில சமயங்களில் கருச்சிதைவு மருத்துவர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. உதாரணமாக முளையத்தில் அல்லது சிசுவில் பாரதூரமான பிறப்புக் குறைபாடு இருப்பது கண்டறியப்பட்டால் (ஸ்கான் அல்லது அல்றா சவுண்ட் மூலம்) அல்லது தாயிற்கு கசம், இருதயநோய், மன நோய், மார்பகப்புற்று நோய் போன்றன மிகக் கடுமையாக இருந்தால் அங்கு ஏற்படுகின்ற

கர்ப்பம் ஆனது மருத்துவ ரீதியாக மருத்துவர்கள் மூலம் வெளியகற்றப்படுகின்றது.

ஆகவே கர்ப்பிணித் தாய்மார்களின் கருச்சிதைவிற்கான அறிகுறிகள் தென்பட்டால் (குருதிக் கசிவு, தீட்டுப்படுதல், அடிவயிற்றில் வலி) ஓய்வு எடுப்பதுடன் தாமதிக்காது வைத்தியரின் ஆலோசனையைப் பெறுவது உகந்தது. இவ்வாறு பெறுவதன் மூலம் அக்கர்ப்பத்தை அழியவிடாது தொடர்ந்து வளர்ச்சியுற வைப்பதற்கு சாத்தியம் உண்டாகின்றது.

அடுத்ததாக கர்ப்பம் முழுமையாக வெளியேற்றப்பட்டாலும் அல்லது பகுதியாக, வெளியேற்றப்பட்டாலும் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதி பெற்று சிகிச்சைபெறுவது அவசியம்.

பெண் ஒருவருக்கு இரண்டு, மூன்றிற்கு மேற்பட்ட கருச்சிதைவுகள் அடுத்து அடுத்து ஏற்படும் போது அவர் அதற்கான காரணத்தை கண்டறிவதற்காக ஓர் பெண் நோயியல் நிபுணரை அணுகி தன்னை முழுமையான பரிசோதனை ஆய்வு கூட சோதனை போன்றவற்றிற்கு உட்படுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்ட கருச்சிதைவுகளில சட்டவிரோதமான கருச்சிதைவு அல்லது தொற்றுள்ள கருச்சிதைவு (Septic abortion) மிக ஆபத்தானது. இங்கு சில சமயங்களில் சிசு வளர்ந்து ஏழு மாத காலத்தை அடையும் தறுவாயில் அது சிதைக்கப்படுகின்றது. அதுவும் பொதுவாக தொற்று நீக்கப்படாத நீண்ட கூரிய ஆயுதங்கள் மூலம் மருத்துவ அறிவு அற்ற ஒருவரினால் மேற்கொள்ளப்படுகின்ற போது கடுமையான தொற்றுக்கள் ஏற்படுவதுடன் கருப்பையில் காயங்கள், துளைகள் போன்றனவும் ஏற்பட வாய்ப்புண்டாகின்றது. இச் சட்ட விரோதக் கருச்சிதைவினால் சிசுவிற்கு மட்டுமல்ல பல சந்தர்ப்பங்களில் கர்ப்பம் தாங்கிய பெண்ணுக்கும் உயிராபத்து ஏற்பட்டிருக்கிறது. இப்படியான கருச்சிதைவு ஏற்பட்ட பெண்ணுக்கு

(அ) கடுமையான காய்ச்சல்

(ஆ) கடுமையான வயிற்றுவலி

(இ) அடிவயிற்றில் தொடும் போது வேதனை

போன்றவற்றுடன் தீட்டுப்படுதலும் காணப்படும், சில சமயங்களில் கருப்பையில் துளைகள் ஏற்படுவதினால் அங்கிருந்த தொற்றானது அருகில் உள்ள குடல், கருப்பை போன்ற உறுப்புக்களையும் பாதிப்பதனால் செப்ரிசீமியா ஏற்பட்டு இறப்பு நிகழவும் வாய்ப்புண்டாகின்றது. இன்று எம் மக்கள் மத்தி

யில் இவ்வாறான கருச்சிதைவு திருமணமாகாத பெண்களில் கர்ப்பம், திருமணமான பெண்களில் வேண்டாத கர்ப்பம் போன்ற சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்படுகின்றது. இது சட்டவிரோதமானது மட்டுமல்ல உயிராபத்தானதும் கூட இதனை சகலரும் மனதில் கொள்ள வேண்டும்.

## கருச்சிதைவைத் தடுப்பதற்குரிய சில ஆலோசனைகள்

- வேண்டாத கர்ப்பத்தை தவிர்ப்பதற்கு தற்காலிக கர்ப்பத்தடை முறைகளை அல்லது நிரந்தர கர்ப்பத் தடை முறைகளை பின்பற்றுதல் வேண்டும்.
- கருச்சிதைவிற்கான அறிகுறிகள் லேசாக தொடங்கும் போதே தாமதிக்காது மருத்துவ ஆலோசனைகளைப் பெற வேண்டும்.
- அடுத்தடுத்து கருச்சிதைவுக்குள்ளாகும் பெண் தன்னை, மருத்துவ ஆய்வு பரிசோதனைகளுக்கு உட்படுத்த வேண்டும். அத்துடன் கர்ப்பம் தங்கிய பின்பு மூன்று மாத காலத்திற்கு உடலுறவில் ஈடுபடுவதைத் தவிர்த்தல் வேண்டும்.
- கர்ப்பம் தங்கி முதல் மூன்று மாத காலத்திற்கு கடுமையான வேலைகள், நீண்ட பயணங்கள் போன்றவற்றை தவிர்த்தல் வேண்டும்.
- நீண்ட கால நோய்கள், கடுமையான நோய்கள் காணப்பட்டால். அவற்றுக்கான பூரண சிகிச்சையைப் பெறவேண்டும்.
- கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உடல் ஓய்வு மட்டுமன்றி உள ஓய்வும் மனச் சந்தோசமும் அவசியமாகின்றது. இதனை கணவனும், மற்றும் கூட இருக்கும் உறவினரும் புரிந்து கொண்டு அதற்கேற்ப சூழலை அமைத்துக் கொடுக்க வழி செய்ய வேண்டும்.
- சட்ட விரோத கருச்சிதைவை முற்றாக நிராகரிக்க வேண்டும் அல்லது தடுக்க வேண்டும்.
- கர்ப்பம் தங்கிய ஆரம்ப காலத்தில் கருச்சிதைவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டால் பெண் நோயியல் நிபுணரிடம் இதற்கான ஆலோசனையைப் பெற வேண்டுமே யொழிய மருத்துவ அறிவற்ற வேறு ஒருவரிடம் போய் ஆலோசனையையோ அன்றி சிகிச்சையையோ பெறக்கூடாது.

# ரதீ மணிக்கூட்டு விற்பனை

★ மணிக்கூடு திருத்துதல்
மணிக்கூடு விற்பனையாளர்



## சகல விதமான மணிக்கூடு திருத்துதலும் விற்பனை செய்தலும்.

**ரதி மணிக் கூட்டு விற்பனை நிலையம்,**
**இல. 46, 48 சந்தோசம் தெரு,**
**யாழ்ப்பாணம்.**

# உன்னோடு ஒரு வார்த்தை!

என் அன்பானவளே
உன் கோலம் ஏன் இப்படி மாறிவிட்டது
மூன்றாண்டுகள் மூன்னூறு யுகங்களாய் கழிய
நீ ஏன் வேதனையில் வெந்து வெந்து
சாகிறாய்

உன் உணர்வுகளை - ஏன் மூடி மறைத்து
வெதும்பி மடிகிறாய்
என் இனியவளே
அழகிய கருவண்டுக் கண்களை ஏந்திய
உன் நிலவு முகம் ஏன் இப்படி வாடி
வதங்கிச் சாக வேண்டும்.
உன்னவன் தான் இறந்து விட்டானே
நீ ஏன் உயிருடன் செத்துக் கொண்டிருக்கிறாய்
மூன்று வருட வாழ்வை அசைபோட்டே
உன் முடிவுக் காலம் வரை வாழப் போகிறாயா?
இதழ்களை மௌனமாக்கி நீ சொல்ல மறுத்த
சோகத்தை உன் விழிகள் சொன்ன போது
என் இதயமே சுக்கு நூறாகிறதே
சமுதாயம் என்னும் இரும்புச் சிறையில்
நசிந்து கிடக்கின்றாயே - மதம்
என்னும் வெறி கொண்ட மிருகங்களால்
நீ வேட்டையாடப் படுமுன் - உன்
சிறைக்கதவை உடைத் தெறி
விதவை என்றால் என்ன விளையாட்டுப்பொருளா?
மறுமணம் என்னும் விடுதலை நோக்கி
விரைந்தோடு - இலலை எனின்
இதயமே இல்லாத சமுகம்
வார்த்தைகளாலேயே உன்னை
வதைத்துக் கொனறு விடும்.

– திலகவதி

# பெண்களும் தமிழீழச் சட்டங்களும்

(உண்மைச் சம்பவம்)

பசுபுசென்று வளர்ந்திருந்த புல்லை அரிவாளால் அறுத்துக் கொண்டிருந்தாள் செல்லம். சறக், சறக்கென்ற சத்தம் தாளத்தோடு அமைந்து வேலையில் ஒரு பிடிப்பை ஏற்படுத்தி விடவே தேவைக்கு சற்று அதிகமான புல்லை வெட்டி நாரிட்டு கட்டினாள். புல்லுக்கட்டில் அரிவாளைக் கொழுவி, முழங்காலில் முட்டுக் கொடுத்து புல்லுக் கட்டை உயர்த்தி தலைக்கேற்ற, சுமை தள்ளாட வைத்தது.

பொழுது நன்கு போய்விட்டது. கையெழுத்து மறையும் நேரம். இடையில் கட்டிய சிற்றாடையை தூக்கிச் சொருகியவாறு வேகமாக நடக்க ஆரம்பித்தாள். காலடியில் வரம்பில் சாய்ந்த இளங் கதிர் சரசரத்தது. வயலைக்கடந்தால், தோட்டக்காணி மதாளித்து. வளர்ந்திருந்த, மரவள்ளியின் ஊடே நடந்து செல்வது ஆனந்தமானது.

செல்லத்துக்கு புறத்தே அசையும் பசியவயலும் கூட்டுக்கு விரைந்து கொண்டிருக்கும் குருவிகளின் இசையும் வயலோடு இணைந்து ஓடிக் கொண்டிருக்கும் சிறு நீர் ஓடையும் ஒரு மயக்கத்தையே கொடுத்தது. அவளுக்கு ஒரு இருபது இருபத்தைந்து வயது இருக்கலாம். சுமாரான அழகு, திடமான தேகம் இவை தவிர குறிப்பாக அவளைப் பற்றி சொல்வதற்கு அவள் படிக்காதவள் என்பது மட்டும் உண்டு அப்பா அம்மா இல்லை. தாய் வழிப் பேரனும் தானும் தான். வேகமாக நடந்து வந்தவள் தோட்டத்தை அண்மித்த போது இருள் முற்றாக கௌவியிருந்தது. 4ஆம் பிறை மூளிச்சந்திரன் வெள்ளாப்பான ஒளியை வீசத் தொடங்கியிருந்தது. வரம்பில் இறங்கி வாய்க்காலைக் கடந்து தோட்டப் பரப்பில் ஏற ஒரு உருவம் அவள் எதிரே நின்றது.

''ஆர் இருட்டில'' அச்சத்துடன் கேட்டாள் செல்லம்.

''அது நான்'' என்ற ஆண் உருவம் அவளை நெருங்கியது.

''ச்சீ வழியைவிடுங்கோ இருட்டில'' செல்லம் கூறி முடிப்பதற்

குள்..... புல்லுக்கட்டு நிலத்தில் சரிந்தது.

* * *

''அப்பு...எணேய் அப்பு...... '' செல்லம் அலட்டி அலட்டி கூப்பிடவே வாசல் திண்ணையில் பாக்குரல் துடைத்துக் கொண்டு இருந்த முருகர் திரும்பிப்பார்த்தார்.

''என்ன மோன கூப்பிட்டனியே'' அவருக்கு கொஞ்சம் தோட்டம் துலை. காதை துடைத்துக் கொண்டு கேட்டால் தான் விளங்கும்.

''உதில சிவராசன் கடையில ரெண்டு பனடோல் வாங்கியாணை'' கிழவர் மெல்ல எழும்பி கடைப்பக்கம் போனார்.

செல்லத்துக்கு காய்ச்சல் குணம் போல சாப்பாடும் செமிக்க வில்லை. இரவு முழுக்க சத்தி. இரண்டு மூன்று நாளாக இதே நிலை சாப்பாட்டிற்கே தட்டுப் பாடு வரும் போன்ற நிலை.

''மெல்ல ஆஸ்சுப்பத்திரிக்கு போட்டு வாவன்'' என்றார் முருகர். ''இப்ப எப்பன் சுகம்'' என்ற செல்லம் அடுத்த நாள் புல்லு வெட்டப் போனாள். புல்லுக் கட்டோடு வரும்போது மறுபடி மரவள்ளித்தோட்டத்தில் வழி மறித்தான் அவன். அவளுக்கு வெறுப்பு குமிழியிட்டது. ''பொம்பிளையள் என்ன செய்யிற அவன்ர உடம்பும் பெலனும் என்னால ஒண்டும் செய்யேலா'' நினைக்கும் போதே அச்சப்பட்டாள். என்ன செய்வது. கிட்ட... மிக... கிட்ட ...

''உன்னைக் கும்பிட்டன் என்னை விடு ஒண்டுஞ் செய்யாத''

''செல்லம் நான் உன்ன கட்டுவன். கட்டுவன் எண்டா கட்டுவன்''

செல்லம் புல்லுக்கட்டை அவனை நோக்கி தள்ளினாள். இதை எதிர்பாராதவன் தடுமாறவே அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஓடினாள். ''அம்மாளாச்சி... ... அம்மாளாச்சி'' என்று மனசுக்குள் ஓலமிட்டபடி அவள் வெட்டையை நெருங்கி திரும்பிப்பார்த்தாள். அவனைக் காணவில்லை. அவளுக்கு பயம் பிடித்தது. ஓடி வந்த களை தலை சுற்றியது.

அடுத்த மாதமும் தொடர்ந்து உடல் சுகவீனமாக இருக்கவே வைத்தியசாலைக்குப் போனாள். வைத்தியர் சொன்ன செய்தி அவளுக்கு இடி விழுந்தது போல இருந்தது. ''அவள் கர்ப்பமாகியிருந்தாள்'!

''யாரிடம் சொல்வது என்ன செய்வது எதுவும் புரியவில்லை'' கலியாணம் கட்ட முதல் பிள்ளை பெறுவது. பெரிய

மானக்கேடு என்பது மட்டும் அவளுக்குத் தெரியும். கொஞ்ச நாட்களுக்கு முன் இப்படிக் கர்ப்ப மான ஒரு பெண், கிணற்றில் விழுந்து செத்துப் போனது அவ ளுக்கு நினைவு வந்தது. ''அப்ப நானும் சாக வேணுமா?'' அவள் அழத் தொடங்கினாள். வீட்டிற்கு வந்து மூலையில் இருந்து அழு தாள். இவள் குமுறிக் குமுறி அழவே, முருகருக்கு ஒன்றும் விளங்கவில்லை.

''ஏன் மோன அழுறாய்'' என்று கெஞ்சிக் கெஞ்சிக் கேட் டார்.

எப்படிச் சொல்றது, செல்லம் அழுதாள். கிழவன் பக்கத்து வீட்டு ராசம்மாவைக் கூட்டி வந்தது. ராசம்மாவும் கேட்டுப்பார்த்தாள். செல்லம் ஒன்றும் சொல்லவில்லை. மறு நாள் புல்லு வெட்டப்போனாள். புல்லுக் கட்டக்கொண்டு வந்த நாரும் கத்தியும் வரம்பில் இருந் தது. புல்லைக் குவியலாக்கி நாரைப்போட்டு கட்டினாள். பொழுதோடு போக வேண்டு மென்ற அவசரம். வேகமாக நடக் கத் தொடங்கினாள். வழியில் அவன் நின்றான்.

''மூதேவி உன்னால நான் சாகப் போறன்'' புல்லுக்கட்டை கீழே போட்டு விட்டு அழுதான் அவள். அவன் சும்மா நின்றான். கொஞ்ச நேரம் நின்றவன் ''எவ்வளவு காசு வேணும்'' என்று கேட்டான்.

''நாசமாப் போக, நான், நான் இப்ப பிள்ளைத்தாச்சி'' என் றாள் அவள். அவன் திடுக்கிட்ட மாதிரி இருந்தது. பிறகு சாவ காசமாக திரும்பி நடந்தான்.

சாக வேண்டுமென்று தெரிந் ததே ஒழிய அதற்கான துணிவு அவளுக்கு வரவில்லை. மூன்று நாலுமாதங்களில். ''யார வன்''? என்ற கேள்வி ஊருக் குள் எழுந்தது. செல்லம் மறைக் காமல் சொன்னாள்.

''உலக நாதன்''

உலக நாதன்......... ஊருக்கு உத்தமன். பணக்காரன் உழைப் பாளி. நிலபுலம் உள்ளவன்.

''தேவடியாள் ஆடித்திரிஞ்சு போட்டு அவன் அப்பாவியைச் சாட்டுறாள்.''

''கட்டு மட்டில்லாமல் காடு கரம்ப வழிய திரிஞ்சாள் இப்ப வயித்தில வாங்கிக் கொண்டு ஆடுறா.''

''உந்த ஆட்டக்காறியளால தானே மழையும் பெய்யாதாம்.'' ''அவவட குலுக்கும் மினுக்கும் ஊருப்பொடியள ஒருமிக்க மடி யில கட்டுவள்''

இவ்வாறான சமுதாய வசை மொழிகளுடன் வயிற்றில் சுமை,

மனதில் சுமை, வாழ்க்கை சுமை. அழுது அழுது துவண்டாள் செல்லம்.

உலகநாதன் உல்லாசியாக திரிந்தான். மனச்சாட்சி வதைக்கவே ஒரு நாள், சில நூறு ரூபாய்களை கொண்டு வந்து கொடுத்தான். அவள் வாங்க மறுக்கவே கிழவர் முருகரின் கையில் வைத்துவிட்டு யாருக்கும் சொல்லாமல் வந்து விட்டான்.

இப்போது தான் பிரதேச வேலை செய்யும் ஒரு பெண் மூலம் இந்த விடயம் பெண்கள் ஆய்வு நிறுவனத்திற்கு எட்டுகிறது. துரிதமாக செல்லத்தை அணுகி பக்குவமாக விசாரித்து அவளுடைய கர்ப்பத்திற்கு காரணம் கேட்ட போது முதலில் தயங்கி பின்னர் கூறினாள்.

பாவம், தான் ஏமாற்றப்பட்டது தெரிந்தும் அதற்குரிய நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள அறிவு அற்றவளாக இருந்திருக்கிறாள். மேலும் கல்வியறிவற்ற காரணத்தாலும் வெட்கத்தாலும் அதை யாருக்கும் வெளியே சொல்லாமலும் தனக்குள்ளேயே வெதும்பியிருக்கிறாள். மேற்கூறியவற்றை உடன் செய்திருந்தால், கர்ப்பத்தைத் தவிர்த்திருக்கலாம். குற்றவாளியையும் உடன் நடவடிக்கைக்கு உட்படுத்தியிருக்கலாம்.

காலம் கடந்தாலும் உலகநாதன் மீது வழக்குத் தொடர முடிந்தது. மிக நுணுக்கமான தந்திரங்களைக் கையாண்டு குற்றம் நிரூபிக்கப்பட்டது. ஆனால் அப்பாவி என்று நினைத்திருந்த செல்லம், குழந்தைக்கு இவன் தான் தந்தை என்று நிருபித்தால் போதும் என்று விட்டாள். ''என்னை அநியாயமாக பழி கேக்க வைச்ச பாவி அவனோட காலம் முழுக்க வாழ எனக்கு என்ன தலையெழுத்தே'' என்று கூறிவிட்டாள்.

உலகநாதன் நட்டஈடாக பெருந்தொகை கொடுத்ததுடன் தண்டனையும் பெற்றான்.

ஆரம்பத்தில் சாட்சி இல்லாத நிலை இருந்தது. உண்மையில் இது போன்ற குற்றங்கள் சாட்சி வைத்துக்கொண்டு நடப்பதில்லை. என்றாலும் கண்டுபிடிக்கப்பட்டு விடும், பெண்கள் கூச்சத்தை விட்டு நடவடிக்கை எடுக்க முன் வர வேண்டும். தமிழீழத்தில் இவர்களுக்கென பெண் காவற்துறையினர், பெண் சட்டவாளர்கள் கடமையில் உள்ளனர். உதவிக்கு நாங்களும் இருக்கின்றோம். □

# தன்னம்பிக்கை
# துணிச்சல்
# முயற்சி

இவற்றையே ஆதாரமாகக் கொண்டு முன்னேற்றப்பாதையின் உச்சியில் நிற்பவர் திருமதி. மகேஸ்வரி பத்மநாதன். துறைதேர்ந்தவர்களே தயக்கம் கொள்கின்ற உதிரிப்பாக வாணிபத்துறையில் ஈடுபட்டிருக்கும் இவர் சவாலுக்குரிய ஒருவராக திகழ்கிறார். இவருக்கு வயது 41. இவரது கணவர் திரு. பத்மநாதன் வர்த்தக சங்கத்தலைவராக இருக்கின்றார். ஆணும் பெண்ணுமாக இரண்டு பிள்ளைகளுக்குத் தாயான திருமதி மகேஸ்வரி அவர்களை, பரபரப்பான காலைப்பொழுதொன்றில், நெல்லியடியில் அமைந்திருக்கும் அவரது ''கிருஷ்ணா உதிரிப்பாக வாணிப'' நிலையத்தில் நாற்றின் சார்பில் சந்தித்தோம். அவரது உறுதியான - தெளிவான கருத்துக்களை ''நாற்று'' வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.



☐ நாற்று சஞ்சிகையின் வாசகர்களுக்கு தங்களை அறிமுகம் செய்யுங்களேன்

☼ எனது பெயர் மகேஸ்வரி. கணவர் பத்மநாதன் வர்த்தக சங்கத்தலைவராக உள்ளார். எனக்கு இப்போது வயது 41. ஒரு மகளும் ஒருமகனும் இருக்கிறார்கள். நான் க. பொ. த. உயர்தரம் வரை கல்வி கற்றுள்ளேன்.

☐ இந்த உதிரிப்பாகக் கடையை எப்போது ஆரம்பித்தீர்கள் ?

☼ நெல்லியடியில் இந்தக் கடையை 1982 இல் ஆரம்பித்தோம். இதற்கு முன்னர் 1975இல் எனது கணவர் பலாங்கொடையில் ''விபேட்டி மோட்டேஸ்'' என்ற பெயரில் வைத்திருந்தார். பின் ''நஷனல் மோட்டேஸ்'' எனப் பெயர் மாற்றினார்.

☐ இங்கே எவ்வகையான உதிரிப்பாகங்களை விற்பனை செய்கிறீர்கள் ?

☼ மோட்டார் சயிக்கிள், லொறி, கார், ரைக்ரர், வோட்டர்பம் போன்றவற்றுக்கான உதிரிப்பாகங்களை விற்பனை செய்கிறோம்.

☐ இந்த வாணிபத்தை தனியாகவே நீங்கள் நடாத்தி வருகிறீர்கள். இந்தத் துறையில் ஈடுபாடு அல்லது ஆர்வம் உங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது ?

☼ எனது கணவர் தான் இந்தக் கடையை ஆரம்பத்தில் கவனித்து வந்தார். காலப் போக்கில் வெளிவேலைகளில் அவர் ஈடுபட்டார். அதனால் கடையில் ஆர்வம் குறைந்ததுடன் நேரப் பற்றாக்குறையும் ஏற்பட்டது. இதனால் நான் கடையை பொறுப்பேற்று நடாத்திவருகிறேன். எனது ஆர்வமும், நாளடைவில் எனக்குக் கிடைத்த அனுபவத்தேர்ச்சியும் எனக்கு உறுதுணையாயின.

☐ உங்களிடம் தன்னம்பிக்கையும் - துணிச்சலும் - கடுமையான உழைப்பும் இருப்பதை உணர்கிறோம். இந்த இயல்புகள் உங்களுக்கு சிறுவயதிலேயே இருந்ததா ?

☼ சிறுவயதிலேயே நான் துடிப்பானவள். எனது 8ஆவது வயதில் நான் சயிக்கிள் ஓடினேன். வடமராட்சியில் முதன் முதலாக சைக்கிள் ஓட ஆரம்பித்த பெண்களில் நானும் ஒருவர்.

நான் பருவமடைந்ததும் என் தாயார் என்னை சயிக்கிள் ஓடுவதை கை விடச்சொன்னார். எனது தந்தை அதை மறுத்து எனக்கு சயிக்கிள் ஓட அனுமதித்தார். அப்போது என்னை பலர் கேலிபண்ணினார்கள். கிண்டலடித்தார்கள். இன்றைய போர்க்கால சூழல்காரணமாக அவர்களும் கூட இப்போது சயிக்கிள் ஓடுகிறார்கள்.

☐ இப்போது நீங்கள் தன்னந்தனியாக இந்தக் கடையை நிர்வகிக்கிறீர்கள். உங்களின் இந்த தற்துணிவை சமூகத்தவர் ஆதரிக்கிறார்களா ?

☼ 75% ஆனோர் ஆதரிக்கிறார்கள். ஆனாலும் புண்படும்படி கதைப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அவர்களின் கதைக்கெல்லாம் நான் காது கொடுப்பதில்லை. அப்படி காது கொடுத்தால் முன்னேற முடியாது.

☐ உங்களுடைய இந்த முன்னேற்றத்துக்கு முக்கிய காரணமாக எதை நினைக்கிறீர்கள்.

☼ மனவலிமைதான். வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற பிடிவாதம் இருக்க வேண்டும். இங்கே சண்டை மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளைகளில் கூட எமது கடைக்குத் தேவையான உதிரிப்பாகங்களை நானே வெளியிடங்களுக்குச் சென்று கொள்வனவு செய்து சயிக்கிளில் சுமந்து வந்தேன்.

☐ இந்தக்கடையை நீங்களே நடாத்த வேண்டும் என்கிற எண்ணம் எவ்வாறு உங்கள் மனதில் குடிகொண்டது ?

☼ இந்தக்கடையை எனது கணவரே நடாத்தி வருகிறார் என வைத்துக் கொள்வோம். நாளைக்கு அவர் திடீரென நோய்வாய்ப் பட்டாலோ அல்லது வேறு ஏதாவது அசம்பாவிதங்கள் அவருக்கு ஏற்பட்டாலோ நான் இந்த வியாபாரம் பற்றி எதுவும் தெரியாத நிலையில் இருந்தால் பொருளாதார கஷ்டம் என்னைச் சூழும். வாழ்க்கையை நடாத்த பிள்ளைகளை வளர்க்க யாரிடமாவது கையேந்தும் நிலை ஏற்படும். மற்றவர்கள் என்னை இலகுவில் ஏமாற்றி விடுவார்கள். ஆனால், இப்போது எனக்கு இந்த வியாபாரத்தை பற்றி முழுவதும் தெரியும். இத் துறையின் நுணுக்கங்கள்

நெளிவு சுழிவுகள் புரியும். என்னை எவராலும் ஏமாற்ற முடியாது. நான் இத்துறையில எந்த ஆணுடனும் சவால்விட்டு வாழுமளவு திறமை, அனுபவம் கொண்டுள்ளேன். எனது சொந்தக் காலில் நான் சுதந்திரமாக நிற்கின்றேன்.

☐ வியாபார துறையில் நீங்கள் முழுமையாக ஈடுபடுவதால் உங்கள் குடும்ப உறவுகள் பாதிக்கப்படுகிறதா?



☼ இல்லை நான் காலை ஏழு மணிக்கே கடைக்கு வந்து விடுகிறேன். எனது வீட்டுக்கடமைகள், குடும்ப சுமைகள், பிள்ளைகளின் தேவைகள் என்பவற்றில் என் கணவரும் எனக்கு ஒத்தாசை புரிந்து எனது வேலைகளையும் புரிந்துணர்வோடு பகிர்ந்து கொள்கிறார். எனவே நாம் மனத்திருப்தியோடு வாழ்கிறோம்.

☐ உங்கள் திருமணத்தைப் பற்றி சொல்லுங்களேன்!

☼ நாங்கள் காதலித்து திருமணம் செய்து கொண்டோம். பேனா நண்பர்களாக இருவரும் ஒருவருக்கொருவர் அறிமுகமானோம்.

இந்த நட்பு காலப்போக்கில் திருமண உறவாக மலர்ந்தது. 22ஆவது வயதில் திருமணம் நடந்தது.

☐ கடைக்கு நிறைய ஆண்கள் பொருட்களை வாங்க வந்து போகிறார்களே?

☼ ஆம் எனது கடைக்கு ஆண்கள் தான் கூடுதலாக வருகிறார்கள். ஏனென்றால் பெரும்பாலும் வாகன உரிமையாளர்களாகவும்,

வாகன ஓட்டிகளாகவும் ஆண்களே உள்ளனர். வியாபாரம் நிமித்தம் ஆண்களுடன் பழகும் அவசியம் இருக்கிறது. இதை எனது கணவர் புரிந்து கொண்டு இருக்கிறார். இதனால் எமக்குள் எதுவித சண்டை சச்சரவும் ஏற்படுவதில்லை.

☐ கணவர் உங்களைப் புரிந்து கொண்டு இருக்கின்றார். ஆனால் சமூகத்தில் சிலர்...

☼ சமுதாயம் எனக்கு தேவை. ஆனால் சமுதாயத்தின் சொற்களுக்கு பயந்து நான் வாழ முடியாது. எனது மனச்சாட்சிக்கு நேர்மையானவளாக வாழ்கிறேன்.

☐ உங்கள் பிள்ளைகளை உங்களைப் போன்று தன்னம்பிக்கை உள்ளவர்களாக வளர்க்கின்றீர்களா?

☼ மகன் சுறுசுறுப்பாக - என்னைப் போல் உள்ளார். ஆனால் மகள் கொஞ்சம் சொகுசு வாழ்க்கையைத் தான்விரும்புகின்றார். இருவருமே படித்துக்கொண்டிருக்கிறார்கள்.

☐ தன்னம்பிக்கை அற்று, துணிச்சல் இன்றி துன்பப்படும் பெண்களுக்கு என்ன ஆலோசனை கூறுவீர்கள்?

☼ எமது சமூகம் இன்னமும் பூரண விழிப்படையவில்லை. சமூகம் பெண்களை அடக்குகிறது. பெண்களும் சமூகத்துக்கு பயப்படுகிறார்கள். உண்மையில் யாருக்கும் பயந்தால் வாழ்க்கையில் முன்னேற முடியாது. துன்பம் தான் மிஞ்சும். மனச்சாட்சிக்கு மதிப்பளித்து வாழ்வதே சிறந்தது. பயனுள்ளது.

நாம் செவ்வியை நிறைவு செய்து கொண்ட போது கடையில் வியாபாரம் சூடு பிடிக்க ஆரம்பித்தது. சைக்கிள் செயின் வாங்க வந்த ஒருவர் அந்த செயின் பற்றி விவாதிக்க- பொறுமையுடனும், உறுதியுடனும் பதில் கூற ஆரம்பித்தார். திருமதி. மகேஸ்வரி. தான் பெண் என்பதால் தன்னை ஏமாற்றவோ விரட்டவோ முனைபவர்களுக்கு தான் தக்க பாடம் புகட்டுவதோடு, அப்பாவித்தனமாக உதிரிப்பாகங்கள் பெற வருவோருக்கு அறிவுரையும் கூறி அனுப்புவதாக அவர் கூறியதை நினைத்தபடி நன்றி கூறி விடைபெற்று வெளிவந்தோம்.

# தமிழிலக்கியத்தில் பெண்களின் இழிதகைமைகள்

மனோன்மணி சண்முகதாஸ், எம். ஏ.

பெண்கள் பற்றிய ஆய்வுகள் இன்று வையகமெங்கும் பரவலாக நடைபெற்று வருகின்றன. எமது தமிழ் இலக்கியங்களும் பெண்கள் பற்றிய செய்திகளை விரிவாகவே பாடல்களிற் கூறுகின்றன. அச்செய்திகள் பற்றிய மதிப்பீடுகளும், கணிப்பீடுகளும் இன்று பிறமொழியாளர்களாலும் செய்யப்படுகின்றன. தமிழ்ப் பெண்களின் மரபான வாழ்க்கையைப் பற்றிய செய்திகளைத் தமிழ் இலக்கியங்களே தெளிவாகத் தருகின்றன என அவர்கள் எண்ணுகின்றனர். ஆனால் பெண்களைப் பற்றிய தமிழ் இலக்கியங்களின் செய்திகளைச் சற்று ஆழமாக ஆராய்ந்து பார்க்கும்போது நமது சமூக மரபு எவ்வாறு பெண்களைப் பெரிதும் இழிதகைமைக்கு ஆளாக்கியது என்பதும் தெளிவாகிறது. எனவே பெண்களின் நிலையை நாம் ஆழமாக எண்ணிப் பார்க்கின்ற காலகட்டத்தில் அச்செய்திகளை மற்றவர் அறிய வைக்கவும் வேண்டியுள்ளது.

## இலக்கியத்தில் ஆணும் பெண்ணும்

**தமிழ்ப் பெண்களின் தொடக்ககால வாழ்வு நிலைக்கும் இன்றைய வாழ்வு நிலைக்கும் வேறுபாடு இருப்பது போலத் தோன்றினும் உண்மையில் அடிப்படையான நடைமுறைகளில் வேறுபாடில்லை என்பதையும் இந்த இலக்கியச் செய்திகளே எமக்கு உணர்த்துகின்றன.**

கால அடிப்படையிலே தோன்றிய இலக்கியங்கள் பல. அவற்றிலே தனிச்செய்யுட்கள், தொடர்நிலைச் செய்யுட்கள், பதிகநிலைச் செய்யுட்கள், காப்பியச் செய்யுட்கள், சிற்றிலக்கியப் படிவச் செய்

யுட்கள், நாட்டார் பாடல்கள், உரைநடை இலக்கியங்கள், புதுக் கவிதைகள் என பலவகையான இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இவற்றிலே பெண்களைப் பற்றிய செய்திகள், பெண்களின் தோற்றப்பாடு, குண இயல்புகள், தொடர்பு நிலைகள், சிறப்பு நிலைகள் என பலவகையாக விரித்துக் கூறப்பட்டுள்ளன. இலக்கியங்களிலே கூறப்பட்ட பெண்ணுக்குரிய இலக்கணங்கள் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களிலும் வரையறை செய்யப்பட்ட இலக்கணங்களாக அமைந்தன. அவையே பிற்காலத்திலே மரபாகப் பேணப்பட்டன. எடுத்துக்காட்டாகத் தொல்காப்பியர் ஆணுக்கு வகுத்துக் கூறிய இலக்கணத்தையும் பெண்ணுக்கு வகுத்துக் கூறிய இலக்கணத்தையும் இங்கு நோக்குதல் தெளிவுதரும்.

''பெருமையும் உரனும் ஆடூஉ மேன'' (தொல்: 1041)


''அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப''
(தொல்: 1042)

முதலாவது எடுத்துக்காட்டு ஆண்களுக்கு அறிவும், ஆற்றலும் புகழும், கொடையும், ஆராய்தலும், பண்பும், நண்பும், பழி பாவமஞ்சுதலும் முதலியனவாய் மேற்படும் பெருமையும் அவற்றிலே உறுதியாய் இருப்பதால் ஏற்படும் உரனுமே சிறப்பான குணங்களாகும் என விளக்குகிறது. இரண்டாவது எடுத்துக்காட்டு அச்சம், நாணம், மடம் என்னும் மூன்று பண்புகளும் பெண்களுக்கு எப்போதும் உரிய குணங்களாகும் என்று விளக்குகிறது. தொல்காப்பியம் கூறுகின்ற இக்குண இயல்புகளே தற்காலம் வரையும் மரபாகப் பேணப்பட்டுவருகின்றன. தொல்காப்பியரது காலத்தில் ஆண் பெண்ணுக்குரிய சிறப்பியல்பு இவ்வாறு வேறுபடுத்தப்பட்டது. ஆண்கள் வெளிவாழ்க்கையோடு தொடர்புபட்டவர்களாகவும் பெண்கள் வீட்டு வாழ்க்கையில் மட்டும் தொடர்புற்றவர்களாகவும் இருந்தனர். பெண்களை ஆண் கடல் கடந்து அழைத்துச் செல்லும் வழக்கமே இருக்கவில்லை. 'முந்நீர்வழக்கம் மகடூவோடில்லை' என்னும் தொல்காப்பிய சூத்திரம் இதற்குச் சான்று பகர்கின்றது. விருந்து புறந்தருதலும், சுற்றம் ஓம்பலுமே பெண்ணுக்குரிய மாண்புகளாக விளங்கின. இத்தகைய பெண்களைப் பற்றிய வரைவிலக்கணம் தொல்காப்பியரது காலத்திற்கு முன்னரும் இருந்துள்ளது போலத் தெரிகிறது.

## பெண்களின் பண்புகள்

தமிழ் இலக்கியங்களிலே காலத்தால் முற்பட்ட இலக்கியங்களாக இன்று எமக்குக் கிடைக்

கின்ற சங்க இலக்கியப் பாடல் களிலும் பெண்களின் பண்பு கள் வேறுபடப்பேசப்படுகின் றன. புறநானூற்றுப் பாடல் ஒன்று பெண்களின் வீரம் பற்றி வியந்துரைக்கும் வேளையில் 'கெடுக சிந்தை கடிதிவள் துணிவே' எனப் பெருமையாய் கூறுகிறது. ஆனால் பெண் குற்ற மற்ற கற்புள்ளவளாகவும் இருந் ததால் மனைக்கு விளக்காகப் பெருமைப்படுத்தப்பட்ட செய்தி யையும் கூறுகிறது. கணவனு டைய பண்புகூறுமிடத்து 'செயிர் தீர் கற்பின் சேயிழைகணவ' 'மனைக்கு விளக்காகிய வாணு தல் கணவ', என்று புறநானூ றும், 'நறுநுதல் சேயிழைகணவ', 'புரையோன் கணவ' எனப் பதிற்றுப்பத்தும் கூறுகின்றன. இவ்வாறு பெருமைப்படுத்தப் பட்ட பெண்களை மட்டுமன்றி இன்னோர் வகையான இழி நிலைப்படுத்தப்பட்ட பெண் களைப் பற்றியும் சங்க இலக் கியங்கள் சுட்டிக் காட்டுகின்றன. விலைமகள், குலமகள் எனப் பெண்கள் இருவகையாக வாழ்வு நடத்தியமை கூறப்படுகிறது. பரத்தையர் என்ற குழுநிலைப் பட்ட பெண்கள் பிறவழிகளிலே பொருளீட்ட முடியாதவர்களாக ஆண்களை மயக்கியே பொரு ளீட்டுகின்ற இழிதொழில் செய் பவர்களாகப் பேசப்பட்டுள்ள னர். பொருள் வளம் பெற்ற ஆடவனைப் பெறுவதில் பெண் களிடையே போட்டிநிலை இருந் ததாக நற்றிணைப் பாடல் (30) ஒன்று கூறுகிறது. தெருவிலே வருகின்ற ஆடவனைக் கண்ட பரத்தையர் ஒவ்வொரு பக்க மாக அவன் கைகளைப் பற்றி இழுத்தபடி நிற்கின்றனராம். அதனால் ஆண்மகனும் யாரு டன் செல்வது என்று தெரி யாமல் துன்பப்பட்டு நிற்கின் றானாம். இங்கு ஆடவர் முன் னால் பெண்கள் இழிதகைமை பெற்றவராக மதிக்கப்பட்டமை விளக்கம் பெறுகிறது. திருமணம்



ஒருத்தி :- *சுவாமி!*

சுவாமி :- *ஓம் பிள்ளாய்*

ஒருத்தி :- *ஒரு பெண் தன் மானத்தைக் காப் பாற்ற என்ன செய்ய வேணும் சுவாமி?*

சுவாமி :- *தங்கக்காப்பிலும் கற் காப்பு மேலானது பிள்ளாய்*

செய்த ஆடவர் மீண்டும் பரத்தையை வீட்டிற்கு அழைத்துச் சென்று மணம் செய்கின்ற வழக்கமும் இருந்துள்ளது. ஐங்குறுநூற்றுப் பாடல் (292) ஒன்று குழந்தைப் பேறு வேண்டி ஆண் மறுமணம் செய்யும் செய்தியைக் கூறுகின்றது. ஆணின் இச் செய்கைக்கு அவனது முதல் மனைவி எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்க முடியாதவளாகவே இருந்துள்ளாள்.

பெண்ணுக்கு ஆண் தான் உயிராக விளங்கினான் எனக் குறுந்தொகைப் பாடல் அடிகள் விளக்கம் தருகின்றன.

> 'வினையே ஆடவர்க்கு உயிர் வாள்நுதல்
> மனைஉறை மகளிர்க்கு ஆடவர் உயிர்''
>
> (குறு : 135)

இது பெண் ஆணிலேயே தங்கியிருக்க வேண்டியவள் என்பதை வரையறை செய்வது போல அமைந்துள்ளது. பெண்ணுக்குத் தனித்தியங்கும் ஆற்றல் இல்லை. அப்படி இயங்கினால் அது உயிரற்ற உடல் இயங்குவது போலவே இருக்கும் என அக் காலத்துச் சமூகத்தவர் எண்ணியிருந்தனர். பரிபாடலில் வழிபாட்டு நடைமுறைகளினூடாகப் பெண்களின் பண்பு குறைத்துப் பேசப்படுகிறது. கன்னிப் பெண்களும், திருமணம் செய்த பெண்களும் முருகன் இருக்கின்ற குன்றத்திலே வழிபாடும் செய்கிறார்கள். முருகனது கொடியை ஏற்றி யானையின் கும்பத்தைக் குங்குமத்தால் அலங்கரித்துப் பூவும் நீரும் தெளிக்கின்றனர். செவிக்கவரிகளைச் சார்த்திப் பவளக்காம்புடைய பொற்குடையைமேலே கவித்துக் கல்யாணமான மகளிரும் கன்னிப் பெண்களும் முருகனை வழிபடுவர். இவ்வழிபாட்டிலே யானையுண்ட கவளத்தின் மிகுதியை அவர்கள் விரும்பி உண்ண வேண்டும். அப்படி உண்ணாவிட்டால் மகளிர் தம்முடைய காதலருடைய சிறந்த அன்பைப் பெறமாட்டார்கள். கன்னிப் பெண்கள் குறைவற்ற மணமகனைப் பெறமாட்டார்கள் என்ற நம்பிக்கை அக் காலத்திலே வழக்கிலிருந்ததைப் பரிபாடல் ஆவணப்படுத்தியுள்ளது.

பெண்ணினுடைய பயன்பாடு பற்றிக் கலித்தொகைப் பாடல் ஒன்று விளக்கம் தருகின்றது. பெண் பிறந்த வீட்டிற்குப் பயன் தருபவள் அல்லள். அவள் ஆடவன் ஒருவனோடு இணைந்தால் பயன் உடையவளாவாள். சந்தனம் மலையிலே வளர்ந்தாலும் அது அந்த மலைக்குப் பயன்படுவதில்லை. தன்னை அரைத்துப் பூசிக் கொள்பவருக்கே பயன்படுகிறது. முத்து கடலிலே விளைந்

தாலும் அது அந்தக் கடலுக்கு எவ்விதப் பயனையும் தருவதில்லை. தன்னை மாலையாக்கி அணிபவருக்கே பயன் தருகின்றது. இசையானது யாழிலிருந்து தோன்றினாலும் அந்த யாழுக்கு அதனால் எவ்வித பயனுமில்லை. அசனைக் கேட்பவர்க்கே பயன் தருகின்றது. இது போலத்தான் பெண்ணும் தான் தோன்றிய இடத்திலே பயன் தருபவள் அல்லள் என்ற கருத்துக் கூறப்பட்டுள்ளது. இயற்கை நிலையிலே சந்தனம், முத்து, யாழ் மூன்றும் தத்தம் நிலையிலே இயங்க வாய்ப்பற்றவை. ஆனால் பெண்ணோ அப்படிப்பட்டவள் அல்லள். அவளுக்கு இயங்கும் ஆற்றல் உண்டு. ஆனால் பெண் 'வீடு' என்ற நிலையிலே குறுகிய வட்டத்துள் மட்டுமே இயங்கவேண்டியவளாகவும் பயன் தருபவளாகவும் இருக்க வேண்டுமென அக்காலத்தவர் எண்ணினர். கணவனோடு அவள் வாழும் நிலையிலேதான் சிறப்புப் பெறுவாள் என வலிந்துரைக்க முற்பட்டனர்.

குடும்பம் என்ற நிலையிலே அவளுடைய திறமைகள் ஒடுக்கப்பட்டன. பெண்ணின் பேராற்றல் வெளிப்படுவதற்கு ஆணின் ஒத்துழைப்பு மிக இன்றியமையாதது எனவும் எண்ணினர். இதனால் 'கற்பு' என்னும் சிறப்புடைப்பண்பு பெண்ணுக்கு ஏற்றிச் சொல்லப்பட்டது. கற்பு என்ற சொல்லின் பொருள் 'கற்றபடி ஒழுகுதல்' என்ற பொருள் தருவது. இப்பொருள் நிலையிலே அது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானதாகவே கொள்ளப்பட வேண்டியது. ஆனால் அக்காலத்து ஆண்கள் கற்பு பெண்ணுக்கே உரிய ஒரு அணிகலம் என வரையறை செய்து அதனை மரபாகவும் ஆக்கிவிட்டனர். ஆணின் பரத்தமை ஒழுக்கத்தைக் கண்டிக்காமல் பொறுத்திருக்கும் பெண் கற்புடையவள் எனப் போற்றப்பட்டாள். பரிபாடல் (20) வரும் செய்தி மூலம் இதனை விளக்கமுடிகிறது.

"சேக்கையினியார்பாற் செல்
வான் மனையாளாற்
காக்கை கடிந்தொழுகல்
கூடுமோ கூடா
தகவுடை மங்கையர் சான்
றாண்மை சான்றார்
இகழினுங் கேள்வரை யேத்தி
யிறைஞ்சுவர்"

மேற்காட்டிய பாடல் அடிகள் ஆண் பரத்தையிடம் சென்று விட்டால் அதற்காக அவனைக் கடிந்துரைப்பதும், நீக்கி வாழ்தலும் மனைவியாற் செய்ய முடியாதவை.சால்புடைய கற்புடைய பெண்கள் தம்மைக் கணவர் எவ்வாறு இகழ்ந்தாலும் அவரை போற்றியே வாழ்வர். என விளக்கங் கூறுகின்றது. நற்றிணை 247ம்

பாடலிலும் இதே போன்று ஆணை ஏத்தி வழிபட வேண்டியவள் பெண் எனக் கூறப்படுகின்றது.

## பெண்ணும் இழிநகைமையும்

பெண்ணின் கற்புநிலை சமூக நிலையிலே பல்வேறுபட்ட செயல்களோடு தொடர்புறுத்திப் பேசப்படலாயிற்று. பெண்ணின் பேராற்றல் அதுவேயெனவும் வரையறை செய்யப்படலாயிற்று. கற்பு நிலையிலும் தலைக்கற்பு, இடைக்கற்பு, கடைக்கற்பு எனத் தரம் பிரிக்கப்பட்டது. ஒரு பெண் கணவன் இறந்தவுடன் தன்னுயிரையும் நீப்பது தலைக்கற்பெனப்பட்டது. அவனோடு உடன்கட்டையேறல் இடைக் கற்பெனப்பட்டது. கைம்மை நோன்பு ஏற்று வாழ்வது கடைக் கற்பெனப்பட்டது. கணவன் இறந்தால் பெண் சமூகத்தில் வாழ்வது தவிர்க்கப்பட வேண்டிய தொன்றாக எண்ணப்பட்டது. அவள் உயிருடன் இருப்பதால் பல இடையூறுகள் சமூகத்திற்கு நேரலாம் எனஎண்ணிக் கைம்மை நோன்புக்கென சில விதிமுறைகள் அமைக்கப்பட்டன. கூந்தல் களைந்து, ஆபரணங்களையும் விடுத்து, உணவைச் சுருக்கி, தம்மை அழகுபடுத்தாமலும் பிற ஆடவர் கண்களிலே தென்படாமலும் பெண் ஒதுங்கி மூலையிலே வாழ வேண்டும் என்னும் எழுதாமறை தோன்றியது. அதற்கு அணி செய்யும் வகையிலே புதியமரபுகளும் தோன்றின. கணவனை இழந்த பின் பெண்ணின் தோற்றம் மாறியதால் அது விழி விசேடத்துக்கு உகந்தது அல்ல எனஒதுக்கப்பட்டது. புறநானூற்றுப் பாடல்கள் பல இக் கைம்மை நோன்பு நோற்கும் பெண்டிரைப் பற்றியும் அவர் வாழ்க்கைநிலை பற்றியும் எடுத்துக் கூறுகின்றன. அழகுப் போர் வையால் பெண்ணின் அறிவாற்றலை நீக்கிய சமூகம் கணவன் இறப்பின் பின் அவள் அழகையே குலைத்துவிட வேண்டும் என விதிமுறை சொல்லிற்று. சிலப்பதிகாரம் என்னும் காப்பியம் இதனை நீண்ட செய்யுள் வடிவிலே விரிவாக ஆவணப்படுத்தியது. சங்க இலக்கியப் பாடல்களிலே சிறிய விளக்கநிலையிலே இருந்த பெண்ணின் கற்பு சிலப்பதிகாரத்தில் பெரியதொரு வரலாறாக மூன்று நாடுகள் தழுவிய பெரும் கதையாக எழுதப்பட்டது. ஆணின் பரத்தைமை ஒழுக்கத்தைப் பெண் கண்டிப்பதற்கு ஆற்றல் அற்றவள் என்ற மரபும் தொடர்வதாயிற்று. மாதவியிடம் சென்ற கோவலனை யாருமே கண்டிக்க முற்படவில்லை. பொருள் வளம் பெற்ற ஆண் எதையும் செய்யலாம் என்ற நிலை பேணப்பட்டது. அவனால் ஏற்படும் சமூகத்தின் சிதைவை ஆரம்பத்திலே களையாமல் முற்றிய நிலயையிலேயே பெண்ணின்

கற்பு என்னும் கருத்து வளர்க்கப்பட வாய்ப்பளிக்கப்பட்டது.

சிலப்பதிகாரத்துக்குப் பின்னர் எழுந்த மணிமேகலையிலும் பரத்தமை ஆடவர்க்கு இயல்பான ஒழுக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டமை பெறப்படுகிறது, பரத்தமை ஒழுக்கமுடைய கணவன் புகழப்படுகிறான். பரத்தமை ஒழுக்கமுடைய கணவனை ஆதிரை, கண்மணி பேன்றவள் என்று புகழுகிறாள். பரத்தமையை ஒழிப்பதற்குப் பெண்கள் துறவு பூணுவதே வழியெனப்படுகின்றது ஆண்களின் பெண் மோகத்திற்கு ஊழ்வினையே ஏதுவாகும். என்று போலி விளக்கமும் கூறப்படுகின்றது. இவ்வுலக வாழ்க்கை நிலையிலே அறிவும் பொருள் வளமும் கொண்ட ஆண்மகளின் ஒழுக்கச் சீர்கேட்டிற்கு அவனது மன அடக்கமின்மையே காரணமாகும். ஆனால் அதை இலக்கியங்கள் எடுத்துக் கூறமுற்படவில்லை. ஆணின் குற்றத்திற்குப் பெண்ணே ஏதுவாகக் கொள்ளப்பட்டாள். பெண்ணின் அழகுதான் ஆண்களின் ஒழுக்கச் சீர்கேட்டிற்கு வழிவகுத்தது என விளக்கம் கூறப்பட்டது. இதனால் பெண்களை வெறுக்க வேண்டும் என்ற ஒரு அறிவுரை கூட ஆண்களுக்கு கொடுக்கப்பட்டது.

அடுத்த இதழில் தொடரும்


## சுடர்

இல. 22, சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.

- நிழற்பட பிரதிகள்
  உங்களுக்கு தேவையான அளவுகளில் பெரிதாக்கியும், சிறிதாக்கியும் செய்து கொடுக்கப்படும்.
- றோணியோ
- தமிழ், ஆங்கில தட்டச்சு செய்து கொடுக்கப்படும்.
- ஸ்ரென்சில் வேலைகள்
- பாடசாலை உபகரணங்கள்

ஆகியவற்றிற்கு இன்றே நாடவும்:

# பெருமைக்குரிய பெண்மணி:-

டொக்டர் ஜொய்செலின் எல்டேர்ஸ்

*வறுமை வாழ்க்கைக்குத் தடையல்ல.........!*
*கடுமையாய் உழையுங்கள் நிறையவே சாதிக்கலாம்......!*

தன் அனுபவங்களையெல்லாம் ஒன்று திரட்டி பெண்ணினத்துக்கு இப்படி அறிவுரை சொல்பவர் டொக்டர். ஜொய்செலின் எல்டேர்ஸ் என்கின்ற அமெரிக்க பெண்மணி. இவர் அமெரிக்காவின் இராணுவத்துறையில் தலைமை மருத்துவராக பணிபுரிகிறார். நாம் சாதித்து முடிக்க வேண்டியவற்றைச் சவாலாக ஏற்றுக் கொள்வோமானால் எதையுமே சாதித்து முடிக்கலாம் என்கிறார் தன்னம்பிக்கை உணர்வுமிக்க இந்தப்பெண். அறுபது வயதிலும் திடகாத்திரமாக இருக்கும் டொக்டர் ஜொய்செலின் எல்டேர்ஸ்க்குவளர்ந்த இருமைந்தர்கள் இருக்கிறார்கள்.

சிறுவயதில் வறுமையின் கோர தாண்டவம் இவர்கள் குடும்பத்தில். பருத்திப்பண்ணை ஒன்றில் கூலித்தொழிலாளிகளாய் இவர் பெற்றோர்கள். அமெரிக்காவின் அறக்கன்சான்ஸ் மாநிலத்தில் ஒருபருத்திப் பண்ணையில் பஞ்சு சேகரிக்கும் பணியில் தன் ஐந்தாவது வயதில் ஈடுபட்டவர் குடும்பத்தின்மூத்தபிள்ளை என்பதால் குடும்பப்பொறுப்பும் இவர் தலையில் தான். இவர்கள் வசித்த குடிசைக்கு மின்சாரமோ குடிநீர்வசதியோ இருக்கவில்லை. தன் 7 சகோதரிகளுடன் சேர்ந்து பகல் முழுவதும் பஞ்சு பொறுக்கிகளைத்துப் போகும் இவர், வேலை முடிந்ததும் அரை மைல் தொலைவிலுள்ள கிணற்றுக்கு சென்று, சகோதரியின் உடுப்புகளையும் சேர்த்து துவைத்து தானும் குளித்து விட்டு வீட்டிற்கு வந்தே உணவு உண்பார், வறுமை உச்சி மயிரில் பிடித்து இவர்களை உலுக்கிய போதும் தனது கடும் முயற்சியால், கடுமையான உழைப்பால், படித்து தன் 15 ஆவது வயதில் உயர்நிலைப்பள்ளிப்படிப்பை நிறைவு செய்தார் ஜொய்செலின்.

புலமைப்பரிசில் பெற்று அறக்கன்சான்ஸ் பல்கலைக்கழகம் புகுந்தார். பட்டம் பெற்று பட்டதாரியானார், அவருடைய

ஆர்வம் முழுவதும் ஆய்வுகூடத் தொழில் நுட்பத்துறையிலே ஈடுபடவேண்டும் என்பதாகவே இருந்தது. ஆனால் குடும்பத்தின் பொருளாதாரம் அதற்கு இடந் தரவில்லை. 1952இல் அமெரிக்க இராணுவத்தில் சேர்ந்தார். இராணுவத்தில் இவர் காட்டிய ஆர்வம், அக்கறையின் காரணமாக அறக்கன்சான்ஸ் மாநில பல்கலைக்கழகத்தில் மருத்துவத் துறையில் படிக்க அனுமதி கிடைத்தது. 1960 ஆம் ஆண்டு டொக்டர்பட்டம் பெற்ற ஜொய்செலின் அறக்கன்சான்சின் சுகாதாரத் திணைக்களத்தில் சேர்ந்தார். படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று இப்போது அறுவைச் சிகிச்சைத்துறையில் தலைமை மருத்துவராக இருக்கிறார் ஜொய்செலின்.

உயர்வான நிலையில் இருக்கும் கலாநிதி ஜொய்செலின் சிறு வயதுமுதலே தான் காட்டிவந்த விடாமுயற்சியும், வறுமையிலும் நல்லொழுக்கத்துடனிருந்த பெற்றோரின் உணர்வுகளுமே உயர்வுக்கு காரணம் என்கிறார். தன்னம்பிக்கையே தலைசிறந்தது என்றும், பிறரில் தங்கி வாழாத நிலையே உயர்வுக்கு இட்டுச் செல்லும் என்றும் இவர் சொல்கிறார். நிறைய பயனுள்ள புத்தகங்களை வாசிக்க வேண்டும் எனப் பெண்களுக்குப் புத்திசொல்லும் இவர் சரிஎனப் படுபவற்றையே செயற்படுத்தவேண்டும் என்றார். எது சரியென்று உங்களுக்குப்படுகின்றதோ அதை எதற்காகவும் செயற்படுத்தப் பின்வாங்காதீர்கள். உங்களைச் சுற்றியுள்ளவர்களைவிட நீங்கள் கடும்முயற்சியுடன் பாடுபடுங்கள். கடுமையான உழைப்பின் மூலமே உயர்வின் சிகரத்தை எட்டலாம். ஒரு காரியத்தை யாராவது செய்ய முடியாது என்று சொன்னால், அதை ஒரு சவாலாக எடுத்து முழுமையாக செய்து காட்டுங்கள். எவ்வளவு கஷ்டமான பணி என்றாலும் இடையிலே கைவிட்டுவிடாதீர்கள். கடுமையாக உழைத்தால் வென்று காட்டுவீர்கள் என்றும் இவர் சொல்கிறார். இவருடைய அறிவுரைகள் எல்லோர்க்கும் பயன்தருவனவாக உள்ளன.


☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

**ஆணாதிக்க ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டம் என்பது ஆண்களுக்கு எதிரான போராட்டம் அல்ல. இது ஆணாதிக்க அறியாமைக்கு எதிரான கருத்துப் போராட்டமாகும்.**

- தமிழீழத் தேசிய தலைவர்

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

# பாக்கியம் மாமியும் பரமேசுவரியும்



பாக்கி :- ஆர் மேனை உது ..... பரமேசுவே ......
துலையாலையே வா றாய்?

பரமேசு :- எங்கடை வேலுப்பிள்ளைச் சாத்திரி
யாரிட்டைப் போட்டு வா றனணை ......
வெய்யில் நல்லா எரிச்சுப் போட்டுது?......

பாக்கி :- வேலுப்பிள்ளைச் சாத்திரியிட்டையோ? ஏன் மேனை அங்கை?......ம்.....

பரமேசு :- என்ர மூத்தவளின்ரை குறிப்பு பாத்தனான்......

பாக்கி : ஆ......ஆ...... என்னவாம்?

பரமேசு :- இந்தப் பங்குனிக்குள்ளை...... அனுப்பட்டாம் ... நல்லகாலமாம்.....

பாக்கி :- எங்கையடிமேனை அனுப்பப்போறாய்...

பரமேசு :- என்னணை தெரியாத மாதிரிக் கேக்கிறாய்...... அவளுக்கெல்லே பிரான்சிலை சம்பந்தம் சரிவந்திருக்கு....

பாக்கி :- ஒரு காலத்திலை எங்கடை நாட்டிலை இருந்து அரிசி மூட்டை, பொயிலைச் சிப்பம், பாக்குமூட்டை எண்டு சீமைக்கு அனுப்பி பொருள் தேடினம்...... இண்டைக்கு பெத்த பொம்பிளைப்பிள்ளையளை வெக்கமில்லாம ஏத்தி ஏத்தி அனுப்புறம்.....

பரமேசு :- எணை மாமி...... ஏனணை அழுறாய்...... நானிப்ப என்ன சொல்லிப் போட்டன்!

பாக்கி :- இல்லையடிமேனை...... பெத்த உங்களுக்கே பிள்ளையளின்ரை அருமை தெரியேல்லை......... அதுகள் சீமைக்குப் போய் படுறபாடுகளை பேப்பர் வழியவும், றேடியோவிலையும் கேக்க எனக்கு வயித்தப் பத்தி எரியுதடி...

பரமேசு :- நீ என்னணை மாமி சொல்லுறாய்?

பாக்கி :- குரங்குகள் குட்டியளை வயித்திலை காவுதுகள் ...... ஏன் கங்காறுவோ என்ன வோவாம் அது வயித்துப்பையிலை குட்டியளை காவுதாம்...... அந்த மிருகங்களுக்கு இருக்கிற உணர்வு கூட உங்களுக்கில்லையேடி மேனை—— டாம்பீகத்துக் காண்டி பிடிச்சுப் பிடிச்சு அனுப்பிறியளே......

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## சாதனையாளர் வரிசையில்......

சொனாலி பாண்டியா என்ற 8 வயதுச் சிறுமியின் பெயர் உலகப்பிரசித்தி பெற்ற கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறப்போகிறது. பிரிட்டனின் இரண்டாம் நிலைக் கல்விப்பொதுத்தராதர தேர்வில் கணனிக் கற்கை நெறியில் சித்தியடைந்த மிகவும் வயது குறைந்த மாணவியாக இவள் திகழ்கிறாள். 1994 இன் முற்பகுதியில் இப் பரீட்சையில் இவள் சித்தியடைந்தாள். இந்தியாவை தாயகமாகக் கொண்ட சொனாலி பாண்டியா தற்போது இங்கிலாந்தில் தன் குடும்பத்தினரோடு வசிக்கிறாள். கணனிஎன்றால் என்ன என்று புரியாத வயதில் கணனியுடன் சொனாலி விளையாடிக் கொண்டிருந்தார். இவளின் ஆர்வத்தைக் கண்ட இவளது தந்தையார் இவளை தன் நண்பர் ஒருவரிடம் கணனியின் அடிப்படைக் கல்வியைப்பயில சேர்த்தார். கணனிக் கல்விக்காக சேர்ந்த சொனாலி இரண்டு, மூன்று வாரங்களிலேயே மிகவும் நுட்பமான அறிவைப் பெற்றுக் கொண்டதால், அவளின் ஆசிரியர் அவளை கல்விப்பொதுத்தராதர தேர்வில் பங்கேற்க ஆலோசனை வழங்கினார். பரீட்சையில் தோற்றிய சொனாலி சித்தியடைந்து இன்று உலகசாதனைகளின் பதிவேடான கின்னஸ் புத்தகத்தில் தன் பெயரைப் பொறிக்கிறாள். சொனாலியை வாழ்த்துவதில் நாற்று மகிழ்வடைகிறது.

நன்றி: இந்து செய்தித்தாள்

# களை எடுப்பு

மங்கையரே உங்கள் மனக்குகையில் மெல்லவும் முடியாமல் முழுங்கவும் முடியாமல் சிக்கிக்கிடக்கும் சந்தேகங்களை, வாழ்க்கைப் பிரச்சினைகளை, கேள்விகளை எமக்கு எழுதி அனுப்புங்கள்.

நாற்றின் அடுத்த இதழில் இருந்து வெளிவரும் களை எடுப்புப் பகுதியிலே தகுந்த விளக்கம் அளிக்கப்பட்டு உங்கள் வாழ்க்கை செழிப்புற, மிளிர, வளர, வாழ நாற்று 'களை எடுப்பு' மூலம் உதவி செய்யும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கேள்விகள் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**'நாற்று' பணியகம்**
**இராசவீதி, கல்வியங்காடு,**
**கோப்பாய்.**

குறிப்பு: தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'களை எடுப்பு' எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

**பெண் விடுதலை என்பது அரச அடக்குமுறையில் இருந்தும் சமூக ஒடுக்கு முறையில் இருந்தும் பொருளாதாரச் சுரண்டல் முறையில் இருந்தும் விடுதலை பெறுவதாகும்.**

- தமிழீழ தேசிய தலைவர்

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆



# அக்கா காத்திருக்கிறாள்

-நந்தினி-

இன்னும் நன்றாக விடிய வில்லை. அக்கா குசினிக்குள் புகுந்து கொண்டுவிட்டாள். நன்கு காயாத பொச்சு மட்டையை அடுப்பினுள் திணித்து, குத்துக் கால் இட்டு உட்கார்ந்து அடுப்பு டன் போராடுபவளைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. சில வரு டங்களாகவே அக்கா எல்லோரு டைய பரிதாபத்திற்கும் உரியவ ளாகத் தான் இருக்கிறாள். அவ ளுக்கு கிடைத்த பேரிடி அவளை வயோதிபத்தின் விளிம்பிற்கே தள்ளி விட்டது. கன்னங்கள் குழிவிழுந்து கண்கள் சீவனற்று போயின. எடுப்பான பல்வரிசை யும் பளிச்சென்ற சிரிப்பும் தொலைந்து போயின.

அடுப்பில் இருந்து எழுந்த புகைப்படலம் தாவாரத்தில் இருந்த என்னை முழுதாக மூடி நாசியிலும், கண்களிலும் எரிச் சலை உண்டு பண்ணியது.

''என்னக்கா நீ ...... பழுக்கப் போடுகிறியோ?''

செல்லமாக கோபித்துக் கொண் டேன்.

ஏன் தான் பகிடியாய் கதைத் தேனோ என்று இருந்தது.
முகத்தில் வேடிக்கையின் பிரதி பலிப்பு எதுவுமே இல்லாமல் என்னை திரும்பிப்பார்த்தவள்,

''விறகு முடிஞ்சுது...... அதான்.........''

ஏதோ முணுமுணுவென்று சொல் லிக் கொண்டே கைக்காரியத்தில் கவனமானாள். முன்பு என்றால் இப்படியா? கலீர் என்று சிரித்திரு ப்பாள். சிரித்துக் கொண்டே இருக்க வேணும் ஆவளுக்கு. நிற் பாட்ட இயலாத சிரிப்பால எத் தனை நாள் அம்மாவின்ர வாயில அரைபட்டு இருக்கிறாள்.

அம்மாவையும் குறைசொல்லே லாது. அவளும் எந்த நேரமும் கூச்சல் போடுகிற மனுசியில்லை. ' பொம்பிளைப் பிள்ளைகள் நாளைக்கு வேற இடத்தில வாழப் போறதுகள். போற இடத்தில ஒரு கெட்ட பெயர் கேட்கப்ப டாது''

என்றது தான் எனக்கு தெரிந்த வரையில அம்மாவின்ர பெரிய கொள்கை. இந்த கொள்கையை காப்பாற்றுவதற்காக பெண் களை அடக்கமாக வளர்க்கிற வரை முறைகள் எதையுமே மீறக் கூடாது என்ற கண்டிப்பை கடைப்பிடிப்பவள் அவள்.

சில நேரங்களில அம்மாவின்ர கட்டுப்பாடுகள் தாங்கேலாத தாக இருக்கும்.

எங்க போறாய்? அங்க போகாதே இங்க போகாதை தனி யத்திரியாதை. மினக்கெடாதை, உதைச்செய்யாதை என்று எல் லாவற்றிற்கும் கட்டுப்பாடுகள் விதிப்பவள். அவற்றை மீறினால் திட்டித் தீர்த்து விடுவாள்.

தனக்கு நினைவறிஞ்ச காலத்திலே இருந்தே அம்மா குருவி சேர்க்கிற மாதிரி காசு பணம் சேர்க்கிறாள் என்று அடிக்கடி சொல்லுவாள். அது எங்கடை சீதனத்திற்காம். எனக்கோ கொஞ்சம் பகட்டாக உடுத்த வேணும், அலங்கரிக்கவேணும். நாலுஇடம் போய்வரவேணும் என்று விருப்பம். அம்மாவோ ஐந்து சதம் பெயர விடமாட்டாள். அம்மாவோட 'சண்டை பிடிக்க ஏலுமோ. அக்காதான் என்னிடம் அகப்படுவாள். வயசுக் காலத்தில சந்தோசமாக இருக்காமை......எதுக்காம் உந்தக் காசு''

அக்கா கிலுகிலுத்துசிரிப்பாள் ''அது சீதனக்காசடி'' எந்த நேரமும் சிரிப்புத்தான் இவளுக்கு, அம்மாவின்ர அச்சான வளர்ப்பு தப்பித் தவறி அம்மாவின்ர காதில இந்தக் கதைவிழுந்தா சாகணும்.

''கொப்பரோ..................'' நீட்டி முழங்குவாள். கொப்பர் உழைச்சு ஏதேனும் சேர்ப்பர் என்று நினைக்கிறியளோ? உழைச்ச காலத்தில குடிச்சு, கண்டவளுக்கும் இறைச்சு கடைசியில வேலையையும் தோத்துட்டு வந்து வீட்டோட குந்தியாச்சு. நானும் கொப்பரை மாதிரி இருந்தால் உங்களை எங்க கரை சேர்க்கிறது..........'

ஆனாலும் அம்மாவுக்கும் ஒரு திடமான நம்பிக்கை இருந்தது.

''தம்பி உழைச்சு உங்களுக்கு சீதனத்தோட முடிச்சு வைப்பன். என்ர பிள்ளையைத் தானே நான் நம்பியிருக்கிறன்.........'' ''பாசத்தோடு. தம்பியின் தலையைத் தடவுவாள்.

வேலை வெட்டி இல்லாமல் வீட்டில் அதிகாரத்தையும் இழந்து நிற்கிற அப்பாவைப் பார்க்கப் பாவமாக இருக்கும். நிறை தண்ணியில இருந்தாலும் அம்மா அப்பாவைக் குற்றஞ் சாட்டுற நேரங்களில் வாயைத் திறக்கமாட்டார் அப்பா. இதுக்கும் அம்மா ஒண்டு சொல்லுவாள்.

''செய்த தில்லுமுல்லுகள் கொஞ்சமே, என்னண்டு வாயைத் திறக்கிறது.''

அப்பா இப்ப உழைக்கிறது அவற்றை குடிக்கே காணாது என்று எங்களுக்கு நல்லாத் தெரியும். இதால அப்பா உழைச்சு எங்களை கரைசேர்ப்பார் என்று நாங்களும் நம்பேல்ல. அம்மா சொன்ன மாதிரி தம்பியைத்தான் நாங்களும் நம்பியிருந்தம். இவன் தானே உழச்சுத் தர வேண்டியவன் என்ற எதிர்பார்ப்போட வளர்ந்தம்.

எங்களை அப்பிடி நட இப்பிடி நட என்று அதட்டுற அம்மாவோ தம்பியை ஒன்றுமே சொல்ல மாட்டாள். இப்பவும் எனக்கு ஒரு சம்பவம் ஞாபகம். சின்ன

# எஸ். எம். பெர்னான்டோ

கண்ணாடி வழங்குபவர்கள்

580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி அருகில்)
யாழ்ப்பாணம்.



S·M·FERNANDO

வயசில நடந்தது. ஏதோ போபத்தில தம்பிக்கு அடிக்கக் கை ஓங்கினன். அடிக்க முதலே அவன் வீரிட்டுக் கத்தினான். அம்மா ஓடி வந்தாள்.

''என்ன ராசா......?'' என்று ஏங்கிப் போய்க் கேட்டாள். தம்பி முடிச்சு முதலே........

''ஆம்பிளைப் பிள்ளைக்கு கை ஓங்குறியோ'' என என் கன்னத்தில் இடித்தாள் அம்மா.

''நீ வா தம்பி........'' என அவனைக் கூட்டிக் கொண்டு போய் விட்டாள். இத்தனைக்கும் அவன் என்னைவிட 04 வயது சின்னவன். ஆனால் பிறகு,

''கொக்காவோட சண்டைக்குப் போறது நல்ல பழக்கமோ'' என அம்மா தம்பிக்கும் புத்தி சொன்னதைக் கேட்ட பிறகும் என்னுடைய மனம் ஆறேல்ல.

அவன் ஒரு பொலிகாளை போலத்தான் வீட்டில வளர்ந்தான்., அவனுக்கு விரும்பினது கிடைத்தது. எந்த இடத்துக்கும் போகலாம். எந்த நேரமும் போகலாம். அவனுக்குத்தான் எப்பவும் முதலிடம். அவனைப் பற்றி நாங்கள் ஒண்டும் குறையாச் சொல்லக்கூடாது. அவனோ தன்னை விட 08 வயது மூத்த அக்காவைக் கூட இயல்பாக வேலை வாங்கினான். எங்களைக் கட்டுப்படுத்தினான்.

அக்கா சாதாரண தரத்தோடயும நான் உயர் தரத்தோடயும் படிப்பை நிப்பாட்டிட்டம். தம்பி உசாராப் படிச்சான். நல்ல உத்தியோகத்தில அமர்ந்தான். அம்மா தான்தான் கஷ்ரப் பட்டுப் படிச்சு வேலை எடுத்த மாதிரி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

அம்மா தம்பியைத்தான் மலை போல நம்பியிருந்தாள். அவன் ஒருத்தன் இருக்கிறான் எண்ட துணிவிலதான், சேத்த காசில சின்னதா ஒரு வீடு கட்டத் துணிந்தாள்.

''மூத்தவளுக்கு வீடும் கேப்பாங்கள் தானே''என்றாள். தம்பி சிகரட் குடித்ததை கண்டுவிட்டு அம்மாவிடம் வந்து சொன்ன போது அவனைக் கரிச்சுக் கொட்டுறம் என்று முறைத்தவள் அவன் வந்தவுடன் நெருப்பெடுத்தாள். அம்மா அழுதாள்; புத்தி சொன்னாள். தம்பியும் கண் கலங்கினதோட அவனை மன்னித்தாள். இப்படிச் சின்னச் சின்னத் தவறுகள் தம்பி விடுறவன் என்பது அம்மாவுக்கும் தெரியும். ஆனால் தனக்கிருக்கின்ற பொறுப்பின்ரை அளவு அவனுக்குத் தெரியும் என்றுதான் அம்மா நம்பியிருந்தாள்.

'கன்னி வீட்டில இருக்க காளை மனை ஏறக்கூடாது' என்றதில கடுமையான நம்பிக்கை அம்மாவுக்கு. அவள் சிறுகச் சிறுகச் சேர்த்த சொத்து - எங்களுடைய வீடு - ஒரு இரவிலேயே


பறிபோனது. இராணுவம் முன்னேற நாங்கள் ராவோட ராவா கையில அகப்பட்ட சாமான்களை எடுத்துக் கொண்டு ஓடினம். எங்களுடைய வீடும், 04 பரப்புத் தோட்டக்காணியும் பறிபோயின. இவை மட்டும் தான் எங்கடை சொத்து. மற்றது தம்பி.

மின்னாமல் முழங்காமல் விழுந்த இந்த இடியில அம்மா நிலை குலைந்து போனாள். போதாததற்கு தம்பி அடுத்த இடியைத் தூக்கி அம்மாவின்ர தலையில போட்டான். தன்னோட வேலை செய்யிற பெட்டையைக் காதலிச்சு ஒருத்தருக்கும் சொல்லாமல் கலியாணம் கட்டிக்கொண்டான். வழமை போல அம்மா தன்னை மன்னிப்பாள் என்ற நம்பிக்கையோட பெண்சாதியையும் கூட்டிக் கொண்டு ஆசீர்வாதம் வாங்க வந்தான்.

அம்மாவோ சொத்துக்கள் முழுமையாகப் பறிபோன துக்கத்தில் இருந்தார். தூரத்தில் வைத்தே தம்பி பெண்சாதியை மேலும் கீழும் பார்த்தாள். கழுத்தில தாலிச் சரடு, கையில ஒரு மோதிரம், மெல்லிய காப்புகள் ஒரு சோடி வேற நகை இல்லை. அவளுடைய குடும்ப நிலையை அம்மாவால் எடை போடக் கூடியதாக இருந்தது.

படலையைத் திறந்து கொட்டில் வாசல் வரையும் அவர்கள் வரும்வரை காவல் இருந்தவள் கிட்ட வந்ததும் தன் கூந்தலை உதறி முடிந்தாள். எழுந்தாள். நிதானமாக,

''எனக்கு ஆம்பிளைப் பிள்ளை இல்லை. செத்துப் போச்சு. தயவு செய்து நான் செத்த பிறகும் என்ரை முகத்தில முழிக்க வேண்டாம்.''



ஒருவர் :- உவர் குமாரசுவாமி படித்த பெரிய மனிதன்

மற்றவர் :- படித்த மனிதனுக்கு அளவு கோல் என்ன?

ஒருவர் :- எங்களுடைய அளவு கோல் சீதனம் தான்

என்றவள் விறுவிறுவென வீட்டினுள் போய்விட்டாள். தம்பி பேயறைந்தவன் போல நின்றான். முதிர் கன்னிகளாக இருந்த அக்காவையும் என்னையும் குற்ற உணர்வோட பார்த்தான் தலை குனிந்தபடி படலையை தாண்டி மறைந்தான்.

அவன் போன பின்னாலதான் அம்மா தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் அழுதாள். இவ்வள வுக்கும் காரணம் அந்தச் சிறுக்கி தான் என்றாள். வேலைக் கெண்டு போய் என்ரை பிள் ளையை மயக்கிப் போட்டாள் என்றாள். மருமகளையும், அவ ளின் குடும்பத்தையும் அவர்களின் பிறப்பையும் குறித்து சரமாரி யாக வசை மொழிகளை அள்ளி இறைத்தாள். மூக்கைச் சிந்தி னாள். சற்று நேரத்தில் யாரு டைய அனுதாப வார்த்தைகளும் இல்லாமலேயே அடங்கிப் போனாள்.

இவ்வளவுக்கும்.........! என்னு டைய நம்பிக்கையைத் தகர்த் துப் போட்டான் என்றதைத் தவிர தம்பியை வேறு எதையும் சொல்லித்திட்ட அவள் பெற்ற வயிறு இடம் கொடுக்கவில்லை.

இதுக்குப் பிறகு எங்களுக்குப் பிடிச்சுது சனி. ஒரு சின்னத் தவறு விட்டால் காணும்.

''அய்யோ ...... உங்களை எவன்ர தலையில கட்ட, சீதனத் துக்கு எங்கை போக ...... ஒரு வேலை ஒழுங்காச் செய்யத் துப் பில்லை ...... எனக்கெண்டு வந்து வாச்சுதுகளே ...... கரை சேர்க்க இருந்தவனும் விட்டுட்டு ஓடி விட்டான் ......''

அன்று முழுக்க இதே புலம் பலாகத்தான் இருக்கும். இப்ப நினைத்துப் பார்க்க, தம்பியை அம்மா பலி ஆடு மாதிரித்தான் வளர்த்திருக்கிறாள் என்று படு குது. நல்ல தீன் கொடுத்து, கட்டுப்பாடுகளைத் தளர்த்தி சுதந்திரமாக வளர விட்டது எங்களுக்காக அவனைப் பலி யிடுறக்குத் தானோ? பெம் பிளைச் சகோதரியளோட பிறந்த சகோதரங்களின்ர நிலை எல்லா வீடுகளிலும் இப்படித் தானோ?

தம்பி படிக்கிற காலத்திலேயே அக்காவுக்குக் கலியாணம் பேசத் தொடங்கியாச்சுது. அவளுச்கு செவ்வாயின் குற்றம். வந்த சம் பந்தம் எல்லாம் சீதனத்தாலயும், சாதகத்தாலயும் கை நழுவிப் போயின.

ஆரம்பத்தில அக்கா இதுகளை பொருட்படுத்தவில்லை. இளம் வயதுக்குரிய மகிழ்ச்சியோடு மிளிர்ந்தாள், கனவுகளை வளர்த் துக் கொண்டாள். தனக்கு எப் படியும் கலியாணமாகும் என்ற உறுதியுடன் உலாவினாள். அவ ளின் நண்பிகள் மணமுடித்து கைகளில் குழந்தைகளுடன்திரிய அவளுக்கு விசனம் ஏற்பட்டது.

''எனக்குக் கலியாணம் சரி வராதோ? ... '' என்னை இரக சியமாகக் கேட்டாள். நாங்கள் வீட்டை விட்டுஓடி வந்ததும் தெரிந்தவர்களுடைய காணியில் வீடு என்ற பெயரில் கொட்டில் போட்டுக் குடியேறியதும் அவ

ளுக்கு தன் திருமணம் பற்றி ஒரு நிச்சயமின்மையை ஏற்படுத்தின. தபபி கலியாணம் செய்திட்டான் என்றதும் அவளின் முகத்தில் சதா உலவும் புன்னகை காணாமல் போனது.

என்னால தம்பியைக் குறை சொல்ல முடியேல்ல. 34, 30 வயதுகள்ள இருக்கிற அக்காமாருக்கு எப்ப உழைச்சு, சீதனம் கொடுத்து கலியாணம் செய்து பிறகு எப்ப அவன் வாழ்க்கையைத் தொடங்கிறது? அதுவும் இந்த விலைவாசியில, கைக்கும் வாய்க்குமே காணாம இருக்கிற சம்பளத்தை வைத்துக் கொண்டு அக்காமாருடைய சுமை கழிய அவன் கிழவனாகி விடுவான். சிலவேளை அப்ப கூட அவனால், அக்காமாரைக் கரையேத்தேலாம இருக்கும். இவை எல்லாவற்றையும் விட அவனை நம்பியிருக்கிற ஒரு பெட்டையை வாழ்க்கை பூரா காத்திரு எண்டு சொல்ல முடியுமோ? இங்கால கொஞ்சப் பெம்பிளையளுக்காக வேற பெம்பிளையளைக் கசக்கிப் பிழிஞ்சு சீதனம் வாங்குறதையும் நேர்மையான செயலா நான் நினைக்கேல்ல.

ஆனால் அம்மாவால வக்கில்லாதவன் வீட்டிலவிழுந்திட்டான் என்கிறதை ஏற்றுக் கொள்ளவே முடியேல்ல.

தன்ரை மைத்துனர்மாருக்குத் தெரிந்த ஆருடையதோ கையைக் காலைப் பிடித்து தம்பி லண்டனுக்குப் போட்டான் என்று அயலுக்கை கதைச்சினம். அவனைப் பற்றி எங்களோடை எதையுமே கதைப்பதைத் தவிர்த்து வந்த அம்மாகூட எங்கையோ அவன்ரை படத்தைப் பாத்திட்டு,

''டாக்குத்தர் மாதிரி இருக்கிறான்......கோட்டும் சூட்டும் போட்டு ... பெரிய மனிசர் மாதிரி......''

என்று எங்கள் காதுபட முனகினாள். இங்கு விடாது மாப்பிள்ளை வேட்டை தொடர்ந்தது.

''என்னால உனக்கும் ஒண்டும் நல்லது நடக்கேல்ல. உனக்கும் வயசு ஏறுது ...... சிக் ......என்ன வாழ்க்கை ......''

அக்கா என் காதில் விழக்கூடிய வாறு அடிக்கடி விரக்தியோட சொல்லத்தொடங்கினாள்.

உண்மை அதுவல்ல. அக்காவை விட்டிட்டு எனக்குப் பேசிறது என்றாலும் சீதனம் இல்லாமல் சரிவராது எண்டது அவளுக்கும் நன்கு தெரியும். ஆனால் இப்படியும் ஒரு வாழ்வு கிடைக்கவில்லையே என்று அக்காவை மாதிரி நான் மன உழைச்சல் படவில்லை.

சீதனத்திற்கு பொருள் தேடுகிறதிற்கு வீட்டவர்கள் பட்ட


அவதியும் மனவேதனைகளும் சீதனம் பற்றிய அதீத வெறுப்பை எனக்குத் தோற்று வித்திருந்தன.

சீதனம் வேண்டி யாராவது என்னை மணம் முடித்தால் அவனை மரியாதையுடன் பார்க்க முடியும் என்றும் எனக்குப் படவில்லை. கனக்க ஏன்? அக்கா மாதிரி நான் கிணற்றுத் தவளையில்லை. எவ்வளவோ செய்ய இருக்கு என்ற சமுதாயப் பார்வை எனக்கு இருக்கு. கையில் உள்ள உத்தியோகம் வேறு என் தன்னம்பிக்கையை வளர்த்திருக்கு.

அக்கா குடும்பம், பிள்ளைகள் ......இது மட்டும் தான் வாழ்க்கை என வளர்க்கப்பட்டவள். சீதனம் ஒரு அடக்கு முறை என்டதை உணர்ந்தே இராதவள். இப்ப பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க முடியாது அவதிப்படுகிறாள்.

திடீர் என்று ஒரு திருப்பம். கொழும்பில் இருக்கிற எங்கடை தூரத்துச் சொந்தக்காரர் லீவு போட்டு விட்டு ஆத்துப்பறந்து ஓடிவந்தார். ''இந்தச் சம்பந்தம் பிள்ளைக்கு எப்படியும் சரி வரும்'' என்றார்.

அம்மா, ஆவலே வடிவானாள். விடுத்து விடுத்து விபரம் கேட்டாள். வீட்டிற்குள்ள இருந்த அக்காவும் வெக்கத்தை விட்டிட்டு தூணிற்குப் பக்கத்தில் வந்து நின்று கொண்டாள்.



வீதியால் ஒருவன் :- ஒரு குகை ஓவியம் அசைந்து போகுது.

பெண் :- ஏன் தம்பி நீ குகை காலத்து காட்டுமிராண்டியோ?

''பெடியன் கெட்டிக்காரன் பார்க்கவும் பிழையில்லை அடக்கமாக கதைக்கிறான்... ''

மாமா நீட்டி முழங்கினார்.

''வேலை...... ?''

''வேலையோ ...... ?'' அவர் அட்டகாசமாக சிரித்தார். ''எடி விசரி ...... பெடியன் வெளிநாடு போக வந்திருக்கிறான். இன்னும் சரிவரவில்லை கொழும்பில நிற்கிறான் ... நான் வளைச்சுப்போட்டன்......''

மாமாவின்ர சிரிப்பும் கதையும் வேலை ஒரு தகுதியே அல்ல என்றது மாதிரி எனக்குப் பட்டது. சில வேளை ஆண் என்கிறது அல்லது வெளிநாடு என்கிறது தான் தகுதியோ?

''பெட்டையின்ர வயசுதெரியும் படிப்புத் தெரியும் அவனுக்கும் சுமையில்லை. உங்க ஊரிலதாயும் தேப்பனும் இருக்குதுகள், பழுத்த பழங்கள்... இன்றைக்கோ நாளைக்கோ எண்டு இருக்குதுகள் ...''

மாமா எல்லாம் சரியெண்ட மாதிரி அடிச்சுச் சொன்னார். ''சீதனம் எவ்வளவு கேக்கினம் அண்ணை?'' அம்மா 'கோடி' பதில் ஒன்றை எதிர்பார்க்கும் வேதனையோட மென்று விழுங்கினாள்.

'உன்னால ஏ...... லுமானதைகுடு' லண்டனுக்குப் போக ஸ்பொன்சர் பண்ணினால் மட்டும்போதுமா''

அம்மாவின் உற்சாகம் பொசுக்கென அணைநதது.

அக்காவும் முகத்தைப் தொங்கப் போட்டுக்கொண்டாள்.

''பொறு... பொறு அவசரப் படாதை உன்ர மோனோட போனுலகதைச்சனான்.ஸ்பொன்சர் பண்ணிக் கூப்பிடுவது தன்ரை வேலை என்றிட்டான்...... பெட்டையை எழுதிக் குடுக்க கூட்டிக் கொண்டு போறது மட்டும் தான் உன்ர வேலை.....''

எனக்கும் சந்தோசமாக இருந்தது. அம்மா எந்தப் பக்கம் கோயில் என்றதை மறந்து எல்லாப்பக்கமும் திரும்பி ''முருகா.... முருகா'' எண்டு கும்பிட்டாள். எந்த நேரமும் வெறியில மிதக்கிற அப்பாவும் கண்கள் பனிக்கச் சிரித்தார். அக்கா...... ? திடீர் என்று இளமையாக தெரிந்தாள். கலீர் என்று நகைத்தாள். வெட்கத்துடன் வீட்டிற்குள் ஓடினாள்.

எனக்குப் பிரமிப்பாக இருந்தது. கல்யாண எழுத்துக்கு ஒரு கிழமை கூட இல்லை, அக்கா என்ன மாதிரி உரு மாறினாள்? கன்னங்கள் மீண்டும் றோசா நிறம் கொண்டன. சதாமுகத்தில் தவழும் புன்னகையுடன் வளைய வந்தாள்.

கொழும்பில எழுத்து நடந்து இரண்டு, மூன்று நாளைக்குள்ள அத்தான் லண்டனுக்குப் பறந்தார். அக்கா கெதியில தானும் போக வேண்டிவரும் எண்ட நினைப்போட திரும்பி ஊருக்கு வந்தாள். நெத்தியில பெரிசாக குங்குமப் பொட்டு வைத்தாள்.

அம்மாவிற்கு முகத்தில் ஓரளவு நிம்மதி. சட்டபூர்வமாக மணமாகி விட்டது. குடும்ப வாழ்வில் இன்னமும் இறங்காத அக்காவுக்கு ஒரு புது அந்தஸ்தை குங்குமம் தந்ததுபோல இருந்தது.

அம்மா பக்கத்து வீட்டுக்காரர் எல்லோரும் சில விசயங்களுக்கு அவளிடம் அபிப்பிராயம் கேட்டினம். அவள் வெளிய போக வர தடையில்லை. பெரிய மனிசிகள் பட்டியலில் அக்கா இணைந்தாள். வேடிக்கை என்ன வென்றால் என்னை ஒன்றும் தெரியாத குழந்தைபோல் நடத்த தலைப் பட்டான். எங்கு சயிக்கிள் மணிச் சத்தம் கேட்டாலும் தபால் காரனோ என்று கைவேலையை போட்டது போட்ட படி விட்டு விட்டு ஓடி வந்து பார்த்தாள்.

அத்தான் 3, 4 மாதத்திற்கு ஒரு தரம் கடிதம் போட்டார். தன்னுடைய சுகம் இங்கு வாழ்க் கைச் செலவு கூட வேலை நிரந் தரம் இல்லை ... கடைசியாக உன் சுகம் எப்படி ...?......இப் படி ஒரே கடிதத்தை பிரதி எடு த்த மாதிரி எல்லாக் கடிதமும் வந்தது.

கடிதம் கிடைத்த அன்றே அக்கா வரிந்து வரிந்து கடதாசி யில ஒரு இடம் விடாது நுணுங்கி நுணுங்கி பதில் எழுதுவாள்.

ஆனால் ...அத்தானின் கடிதங் களிற்கு இடையில் உள்ள இடை வெளி நீண்டது.

''லண்டனில அவனுக்கு ஒரு பெட்டை இருக்காம், குடும்பம் நடத்துகிறானாமாம். உங்களை விட்டுட்டான் ......''
ஊரில குசு குசுப்பு எழுந்தது.

அக்கா வெளிறிப்போனாள். அத்தானின் கடிதங்களின் வரத்து அறவே நின்றது. இங்கு அக்கா நிரந்தரமாக மௌனமாகப் போனவள் போலானாள். கண் கள் குழி விழுந்து ஒளியிழந்தன. கன்னங்கள் சோபை இழந்து ஒட்டிப்போயின.

ஆனாலும் செவ்வாய், வெள்ளி தவறாது, அத்தானின் பேருக்கு அர்ச்சனை செய்ய அக்கா தவறுவதேயில்லை. அழுத்தமாக பொட்டிடும் போது தெரியும் விரல் நடுக்கத்தில், அவள் மனநடுக்கம் தெரியும். ஆனா லும் அத்தான் தன்னை ஏற்பார். அவரோடு வாழ்வது தான் வாழ்க்கை என்று அக்கா இன்னமும் நம்பிக்கொண்டிருக் கிறாள். இன்னமும் தபால் காரனை எதிர்பார்க்கிறாள். அவரைக் கண்டதும் விகசிக்கும் அவள் முகம், அவர் கடந்து சென்றதும் கூம்புவது இங்கு நாளாந்த நாடகம். இந்த நாட கம் முடிய மௌனமாக அடுப் புக்குப் பக்கத்தில் போய் அமர் வாள். மறுபடியும் மறுநாளைய நாடகத்திற்கான ஒத்திகை போலும்.

அத்தான்ர கதை சேள்விப்பட் டதும் அம்மா முடிந்த கூந் தலை உதறி அவிழ்த்தாள்.

''வெளிநாடு போறதிற்காக என்ர பிள்ளையின் வாழ்வை சீரழிச்சுப் போட்டான்.....

ஐயோ ... ஐயோ இவன் நல்லாய் இருப்பனோ ..?

என்று மண் அள்ளித் திட்டினாள். அக்காவின் முகத்தில் தெரிந்த வேதனை அவள் வாயை அடைத்தது. இப்ப அம்மாவும் முடங்கிப் போனாள்.

''கடவுளே...... உவன் பெடியன்ர மனதை மாற்றாயோ...'' என்று சில வேளை முணுமுணுப்பாள். சில வேளை மௌனமாக கண்ணீர் வடிப்பாள். அவளுடைய வாய் மட்டுமல்ல செயற்திறன், ஆளுமை எல்லாமே ஓய்ந்து போயின.

எனக்கு அத்தானை நினைக்க சீ என்று இருக்கும். என்ன மனிதன் இவன்? தன்னுடைய வசதிகளுக்காக ஒரு பெண்ணினுடைய மன உணர்வுகளை மிதிக்கிறவன். ஆனால் அக்காவை நினைத்தால் மனம் குமுறும், விட்டுட்டு இன்னொருத்தியோட போனவனுக்காக இன்னும் வழிமேல் விழி வைத்து இருக்கிறாளே...... இது மட்டும் தானா வாழ்க்கை?

முற்போக்கு சிந்தனைகள் மனதிற்குள்ள இருக்கு. ஆனால் அக்காவிற்கு விவாகரத்து வேண்டிக்கொடுத்து மறுமணம் செய்து வைக்க எனக்கு வக்கு இல்லை.

பெண்களிற்குத்தான் இந்த சமூகத்தில் எத்தனை தளைகள்? சமூகத்தினுடைய சிந்தனையை என்னால் தனிய மாற்றியமைக்க முடியுமா?

சிந்தனையில் மாற்றம் வரும் வரைக்கும் அக்கா போன்ற ஆட்கள் காத்திருக்க வேண்டியவர்கள் தான்.

கணீர் கணீரென்ற மணிச்சத்தம் என் சிந்தனையை அறுத்தது. தபால்காரர் கையில் கட்டு நீலக் காகிதங்கள்.

''ஓ! வெளிநாட்டுத் தபால்கள்''

அக்கா குசினிக்குள்ளால விரைவாக வெளிப்பட்டாள்.

அவள் முகத்தில் இலங்கிய புன்னகை விரைவில் அவிந்தது. நிராசையோடு தபால்காரனின் முதுகைப் பார்த்தாள். பெருமூச்சு விட்டாள்.

என்னை அமைதியாக பார்த்தாள். கண்களில்'' நாளைக்கு வருமோ?'' என்ற எதிர்பார்ப்பு இருந்தது. அக்கா காத்திருக்கிறாள்.

எவ்வளவு காலத்திற்கு? ☐

உயர்ந்தரக வீட்டு மரத்தளபாடங்களுக்கு
மற்றா பேணிச்சர்

தற்போது தூய தமிழில்

# மு.அ.த. இ. மே. அணைக்கல நிலையம்

பெயர் மாற்றம் செய்யப்பட்டு சேவையாற்றி
வருகின்றார்கள்.

தங்கள் தேவைக்கு ஒரு முறை விஜயம்
செய்து பாருங்கள்.

137. சந்தோசம் தெரு,
யாழ்ப்பாணம்.

தவண்டு வரும் - சஞ்சிகை

# நாற்றிற்கு

எங்கள் இனிய

வாழ்த்துக்கள்

இரும்பகம்

அருச்சுனா சாலை

யாழ்ப்பாணம்.

# கிருஷ்ணா உதிரிப்பாக வாணிபம்

உங்களுக்கு தேவையான

- வோட்டர்பம்
- கார்
- டிரைக்டர்
- மோட்டர்சைக்கிள்

ஆகியவற்றின் உதிரிப்பாகங்கள் ஒரே இடத்தில் கிடைக்கும் இடம்

கிருஷ்ணா உதிரிப்பாக வாணிபம்
கரவெட்டி றோட்,
நெல்லியடிச் சந்தி,
நெல்லியடி.